# ஸத்திய தரிசனம்.

### மஹாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

## பாகம் 4. அத்தியாயம் 33.

### நற்குண அமைப்பும், இலக்கியக் கல்வியும்.

டால்ஸ்டாய் பண்ணையில் சரீரப் பயிற்சிக்கும், இடையிடையே தொழிற் பயிற்சிக்கும் நாங்கள் எவ்விதம் ஏற்பாடு செய்தோமென்பதை முந்தின அத்தியாயத்திலிருந்து நீங்கள் தெரிந்து கொண்டிருக்கலாம். எனக்குத் திருப்திகரமான வழியில் இப் பயிற்சி கொடுபட்டு வராத போதிலும் இத்துறையில் அநேகமாக வெற்றி யேற்பட்டதென்றே சொல்லலாம். ஆனால், சாதாரணக் கல்வியைப் போதிப்பது கஷ்டமான விஷயம். அதற்கு வேண்டிய திறமையாவது, பயிற்சியாவது எனக்கில்லை; தவிரவும், இந்தப் பகுதியைப் போதிப்பதற்கு வேண்டிய அவகாசமும் எனக்கில்லை. சரீர சிரமப்பட்டு நான் செய்து வந்த வேலைகளின் பலனாக சாயங் காலத்தில் நான் மிகவும் களைத்துப் போவேன். சிரம பரிகாரம் செய்து கொள்ள வேண்டுமென்று தோன்றும் பொழுதுதான் வகுப்புகளை விட்டுப் போவேன். ஆகவே, வகுப்புகளுக்கு நான் உற்சாகத்துடன் வருவதற்குப் பதிலாக மிகவும் சிரமப்பட்டு விழித்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. காலை நேரங்களில் பண்ணை வேலையையும், குடும்ப வேலைகளையும் கவனிக்க வேண்டியிருந்தது. ஆகையால், மத்தியான போஜனத்திற்குப் பிறகே பாடசாலை நேரத்தை வைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. பாடசாலையை வைத்துக் கொள்ளுவதற்குத் தகுதியான வேறு நேரம் கிடைக்கவில்லை. சாதாரணக் கல்விக்கு மூன்று பீரியட்கள் வைத்துக் கொண்டோம். ஹிந்து, தமிழ், குஜராத்தி, உருது இந்த பாஷைகளைக் கற்றுக் கொடுத்தோம். சிறுவர் சிறுமிகளுக்கு அவரவர்களுடைய தாய்ப் பஷையின் மூலமாகப் பாடம் சொல்லிக் கொடுத்தோம். ஆங்கிலமும் கற்றுக் கொடுத்தோம். குஜராத்தி வகுப்பினரைச் சேர்ந்த ஹிந்துக்களுக்குச் சம்ஸ்கிருதமும் சிறிது கற்றுக் கொடுக்க வேண்டியிருந்ததுடன், எல்லாக் குழந்தைகளுக்கும் சரித்திரம், பூகோளம், கணிதம் இவைகளையும் சொல்லிக் கொடுக்க வேண்டியிருந்தது. கப்பல் யாத்திரைக் காலங்களிலும், சிறையிலிருந்த காலத்திலும் தான் நான் சிறிது தமிழ் கற்றுக் கொண்டிருந்தேன். போப்பையர் புத்தகத்தைக் கடந்து நான் செல்லவில்லை. உருது எழுத்துக்களை ஒரு கப்பல் யாத்திரை காலத்தில் தெரிந்து கொண்டது தான். அந்த பாஷையை முஸ்லீம் நண்பர்களுடன் சம்பாஷித்த காலத்தில் அவர்கள் உபயோகித்த பர்ஷிய, அரபி வார்த்தைகளிலிருந்து தெரிந்து கொண்டிருந்தேன். சம்ஸ்கிருத பாஷை நான் ஹைஸ்கூலில் தெரிந்து கொண்டது தான். குஜராத்தி பாஷையிலும் பள்ளிக் கூடத்தில் கற்றுக் கொள்ளக் கூடியதற்கு அதிகமாக நான் பரிச்சியம் ஏற்படுத்திக் கொண்டுவிட வில்லை.

இந்த யோக்கியதைகளை வைத்துக் கொண்டுதான் நான் போதித்து வர வேண்டியிருந்தது. பாஷா ஞானத்தில் எனது சகாக்கள் என்னிலும் பின்னடைந்தவர்களாகவே இருந்தார்கள். இருந்தாலும், என்னுடைய தேச பாஷைகளில் எனக்கிருந்த அன்பினாலும், என்னுடைய சக்தியில் எனக்கிருந்த நம்பிக்கையினாலும், என்னுடைய மாணுக்கர்களுடைய அறியாமையினாலும், அவர்களுடைய பெருந் தன்மையினாலும் நான் போதித்து வருவது சாத்தியமாயிற்று.

தமிழ்ச் சிறுவர், சிறுமிகள் தென்னாப்பிரிக்காவிலேயே பிறந்தவர்கள். ஆகவே அவர்களுக்குத் தமிழே தெரியவில்லை. தமிழ் எழுத்துக்களிலும் அவர்களுக்குப் பரிச்சியம் இல்லை. ஆகையால் நான் அவர்களுக்குத் தமிழ் அக்ஷரங்களையும், தமிழ் இலக்கணத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டியிருந்தது. அதை நான் சுலபமாகச் செய்தேன். தமிழ் சம்பாஷணையில் என்னிலும் திறமையைத் தாங்கள் அடைந்துவிடக் கூடுமென்பது எனது மாணவர்களுக்குத் தெரியும். ஆங்கிலம் தெரியாத தமிழர்கள் என்னைக் காண வந்தபோது அவர்களே மொழி பெயர்ப்பாளர்களாக இருந்தனர். என் [illegible]

மறைத்துக் கொள்ளாததால் குஷியாகக் காலந் தள்ளி வந்தேன். எல்லா வழிகளிலும் நான் உண்மையில் எவ்விதமிருந்தேனோ அவ்விதமே என்னைக் காட்டிக் கொண்டேன். ஆகையால், அவர்களுடைய பாஷையில் நான் அதிக அனுபவமில்லாதவனாக இருந்த போதிலும், அவர்களுடைய அன்பையும் நன் மதிப்பையும் நான் இழக்கவில்லை. முஸ்லீம் சிறுவர்களுக்கு உருது பாஷையைக் கற்றுக் கொடுப்பது இதைவிடச் சுலபமாகவிருந்தது. அவர்களுக்கு அக்ஷரங்கள் தெரியும். படிப்பில் அவர்களுக்கு ஆர்வத்தை உண்டு பண்ணி, கையெழுத்து நன்றாக இருக்கும்படிச் செய்து கொள்ளும்படியே நான் தூண்ட வேண்டியிருந்தது.

இந்தச் சிறுவர் சிறுமிகள் எழுத்து வாசனையில்லாதவர்கள். பள்ளிக் கூடங்களுக்குச் சென்று அப்பியாசமில்லாதவர்கள். அவர்கள் சோம்பித் திரியாமல் அவர்கள் படித்ததை மேன் பார்வை பார்ப்பதை விட நான் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டியவை அதிகமாக இருக்கவில்லை. இதைச் செய்வதில் நான் திருப்தியடைந்ததால் பலதரப்பட்ட வயதினருடன் நான் காலந்தள்ளி வரவும், ஒரே வகுப்பில் பல பாடங்களைக் கற்றுக் கொள்ளவும் எனக்குச் சாத்தியமாயிற்று. இப்பொழுது நாம் அதிகமாகக் கேள்விப்படும் பாடப் புத்தகங்கள் அவசியமென்று நான் அக்காலத்தில் நினைக்கவில்லை. அப்பொழுது கிடைத்த பாடப் புத்தகங்களையும் நான் அதிகமாக உபயோகித்ததாக எனக்கு ஞாபகமில்லை. பையன்கள் மூட்டைக் கணக்காகப் புத்தகங்களைப் படிக்கும்படி வற்புறுத்த வேண்டியது அவசியமென்றும் நான் நினைக்கவில்லை. மாணவர்களுக்குச் சரியான பாடப் புத்தகம் அவர்களுடைய உபாத்தியாயர் தானென்பது என்னுடைய அபிப்பிராயம். பாடப் புத்தகங்களிலிருந்து எனது ஆசிரியர்கள் எனக்குக் கற்றுக் கொடுத்த விஷயங்கள் எனது ஞாபகத்திலில்லை. புத்தகங்களில்லாததாக அவர்கள் கற்றுக் கொடுத்த பல விஷயங்கள் இன்னும் எனது ஞாபகத்திலிருந்து வருகின்றன. குழந்தைகள் கண்களால் படிப்பதை விடக் காதால் கேட்பவைகளை நன்றாகக் கொள்ளுகின்றன. எந்தப் புத்தகத்தையும் ஆரம்ப முதல் அந்தம்வரை என்னுடைய மாணுக்கர்களுடன் நான் படித்ததாக ஞாபகமில்லை. நான் பல புத்தகங்களிலிருந்து படித்துத் தெரிந்து கொண்டிருந்த விஷயங்களை என்னுடைய பாஷையில் அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தேன். அவர்கள் இன்னமும் அவர்களுடைய ஞாபகத்திலிருந்து வருமென்றே நான் நினைக்கிறேன். புத்தகங்களில் படித்ததை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுவது அவர்களுக்குக் கஷ்டமாகவிருந்தது. ஆனால் நான் வாயால் சொல்லிக் கொடுத்தவைகளை அவர்கள் சுலபமாகத் திருப்பி ஒப்புவித்தார்கள். படிப்பது அவர்களுக்குக் கஷ்டமாகவிருந்தது. ஆனால், நான் வாயால் சொல்லியதை அவர்கள் களிப்புடன் கேட்டார்கள். அடிக்கடி அவர்கள் என்னைக் கேள்விகள் கேட்டதிலிருந்து அவர்களுடைய சிந்தாக்கிர சக்தியின் வன்மையை நான் அறிந்து கொண்டேன்.

## பாகம் 4. அத்தியாயம் 34.

### ஆத்ம ஞான உபதேசம்.

என் வசத்திலிருந்த மாணவர்களுக்கு தேக வலிமை, மனோ உறுதி முதலியவைகளைப் பற்றிப் போதிப்பதைக் காட்டினும் ஆத்ம ஞான அபிவிருத்தி சம்பந்தமான விஷயங்களைப் போதிப்பது மிகக் கஷ்டமாகவிருந்தது. மாணவர்களுக்கு ஆத்ம ஞானத்தைப் போதிப்பதற்கு நான் மத கிரந்தங்களையும் சிறிது உபயோகித்தேன். ஏனெ [illegible]

மதத்தின் மூலக் கொள்கைகளைப் பற்றி ஒரு சிறிதும், மத கிரந்தங்களைப் பற்றி விசாலமாகவும் அறிந்திருக்க வேண்டுமென்பது என் நம்பிக்கை. ஆகலின் என் நம்பிக்கையின்படி அவர்களுக்கு அறிவைக் கொடுப்பதற்கு அவசியமான கிரந்தங்களை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஆனால் அதுவும் அறிவு விருத்தி செய்வதில் ஒரு பாகமே உபயோகப்படும் என்பதும் என் அபிப்பிராயம். டால்ஸ்டாய் பண்ணையிலிருந்து வாலிபர்களுக்குக் கல்வியைக் கற்பிக்கும் வேலையை நான் ஏற்றுக் கொள்வதற்கு நீண்ட நாள் முன்னரே, நான் ஆத்ம ஞானம் மட்டும் தானாகவே ஒருவருடைய உள்ளத்தில் அபிவிருத்தியடைய வேண்டுமென்று அறிந்து கொண்டிருந்தேன். ஆத்ம ஞானத்தை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு நற்குண நல்லொழுக்கமும், கடவுள் அறிவும், தன்னம்பிக்கையும் வேண்டும். மேலும் ஆத்ம ஞானம் இல்லாமல் இதர விதமான கல்வி முறையெல்லாம் மாணவர்களுக்குப் பயன்படா தொழிவதுடன் சிற் சில சமயங்களில் தீமையையும் தோற்றுவிக்கின்றது என்றே நான் நிச்சயித்திருக்கிறேன்.

தன்னைத் தானறிதல் என்னும் உணர்ச்சி நான்காவது ஆசிரமமாகிய சன்னியாச வாழ்க்கையில் மட்டுமே தோன்றும் என்று பலர் நம்பி வரும் மூடக் கொள்கையைப் பற்றி எனக்கு அதிகம் தெரியும். ஆனால் வாழ்க்கையின் இறுதிப்பகுதியாகிய சன்னியாச ஆசிரம காலம்வரை நான் தன்னைத் தானறியும் உணர்ச்சியைப் பெற முயற்சி செய்யாமலே வீண் வேதாந்தம் பேசிக் கொண்டிருப்போமாயின் அப்பருவத்தில் நாம் வயது சென்ற, தேகம் மெலிந்த முதுமைப் பருவத்தை மட்டும் அடைந்து பூமிக்குப் பாரமாக இருப்போமே யன்றி எத்தகைய உயரிய ஞானத்தையும் பெற முடியாமற் போகும். இந்த அபிப்பிராயத்தை 1911–12—ம் வருஷத்திலேயே அம் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் போதே நான் பெற்றிருந்ததாக எனக்கு ஞாபகமிருக்கிறது.

இந்த ஆத்ம ஞானத்தை எப்படி போதிப்பது? நான், சில மந்திரங்களை மனப் பாடம் செய்து பாராமல் ஒப்பிக்கும்படி மாணவர்களுக்குக் கட்டளை யிட்டேன். மேலும் நல்லொழுக்கத்தைப் போதிக்கக் கூடிய புஸ்தகங்களை வாசித்து அவர்களுக்கு வியாக்கியானம் செய்து வந்தேன். ஆனால் இந்த முறையும் எனக்குத் திருப்தியைத் தரவில்லை. மேலும் நான் அவர்களுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்த போது புஸ்தகங்களால் அவர்களுக்கு ஆத்ம அறிவு அபிவிருத்தியாகாதென்று அறிந்து கொண்டேன். தேக வலிமையும், மனோ உறுதியும் அப்பியாசங்களால் அபிவிருத்தியடையச் செய்வதேபோல் ஆத்ம அறிவையும் ஆத்மப் பயிற்சியால் தான் அபிவிருத்தி செய்ய முடியுமென்று தீர்மானித்தேன். அன்றியும் ஆன்மப் பயிற்சி தருவதும் ஆசிரியராக அமைகிறவரின் நற்குண நல்லொழுக்கத்தைப் பொறுத்ததாகவிருக்கிறதென்பதையும் அறிந்தேன். உபாத்தியாயர் மாணவர்களிடையே இருந்தாலும் இல்லாவிட்டாலும் தம் மட்டில் மாறுபாடாக நடந்து கொள்ளாமல் ஒழுக்கத்துடன் வாழ்க்கையை அனுஷ்டிப்பதில் கவனத்தைச் செலுத்த வேண்டும். ஒவ்வொரு உபாத்தியாயரும் மாணவர்கள் இருக்கும் இடத்துக்குப் பல மைல்கள் அப்பால் இருந்து கொண்டே தம்முடைய வாழ்க்கையின் மேம்பாட்டால் மாணவர்களின் ஆத்ம ஞானத்தில் அபிவிருத்தியை உண்டாக்கலாம். நான் பொய்யனாயிருந்து கொண்டு மாணவர்களை உண்மை பேசும்படி போதிப்பது வெறும் சோம்பேறிப் பேச்சேயாகும். அச்சங் குடி கொண்ட மனதையுடைய உபாத்தியாயர் தம் மாணவர் [illegible]

அவ்வாறே தன்னடக்க மற்ற போதகாசிரியர் தமது மாணவர்களுக்குத் தன்னடக்கத்தைப் போதிக்கமுடியாது, ஆதலின் என்னுடன் வசிக்கும் மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் தக்க ஒரு வழி காட்டியாக நான் இருக்க வேண்டுமென்று கண்டு கொண்டேன். எனவே அவர்களே எனக்கு ஆசிரியர்களாகி விட்டார்கள். ஏனெனின், அவர்களுக்காகவேனும் நான் நல்ல ஒழுக்கமுள்ளவனாகவும், நல்லவனாகவும் இருக்க வேண்டிய அவசியம் நேரிட்டது. டால்ஸ்டாய் பண்ணையில் நான் தன்னடக்கத்துடனும், ஒழுக்கத்துடனும் நடந்து கொண்டதற்கு நான் ஏற்றுக் கொண்ட வேலையே ஒரு காரணமாக இருந்ததென்றும் கூறுவேன்.

அம் மாணவர்களில் ஒருவன், அடக்க முடியாதவனாகவும், பொய்யனாகவும், சண்டைக்காரனாகவும் இருந்தான். ஒருமுறை அவன் அதிகமாய்ச் சண்டையிட்டான். நான் அதிக கோப மடைந்தேன். நான் என் மாணவர்களை எப்போதும் தண்டித்ததில்லை. ஆனால் இம்முறை எனக்கு அதிக கோபம் வந்து விட்டது. நான் அவனுக்கு அறிவூட்ட முயன்றேன். ஆனால் அவன் என்னையும் மீறிப் போனான். இறுதியில் நான் சமீபத்தில் கிடந்த ஒரு ரூல் தடியை எடுத்து அவனது கையில் ஒரு அடி அடித்தேன். ஆனால் நான் அடிக்கும் போது என் தேக மெல்லாம் நடுங்கிற்று. அதை அவன் கவனித்து விட்டான். இச் சம்பவம் அங்கிருந்த மாணவர்களுக் கெல்லாம் விசித்திரமானதாகவிருந்தது. நான் இவ்வளவு தூரம் மன வருத்த மடைந்ததற்காக அந்தப் பையன் அதை உணர்ந்து கொண்டு வருத்தப்பட்டான். அது முதல் அவன் எப்போதும் என்னை மீறி நடந்ததில்லை. அவன் பதினேழு வயதுள்ள வலிமையோடு கூடிய வாலிபனாயிருந்தும் என்னை அன்று எதிர்க்காமல் இருந்து என் கோபத்தை அறிந்து உணர்ந்ததற்காக நான் சந்தோஷப்படுவதுடன் அன்று நான் முரட்டுச் சுபாவத்துடன் நடந்து கொண்டதற்காக இன்றளவும் மன வருத்தப்படுகிறேன். நான் ஆத்ம அறிவைக் காட்டாமல் பலாத்காரத்தை அன்று வெளிப்படுத்தியதற்காக என்னால் வருந்தாமலிருக்க முடியவில்லை.

நான் எப்போதும் கொடிய தண்டனைகளை ஆதரிக்கிறவனல்லன். ஒரே ஒரு முறை என் குமாரர்களில் ஒருவனையும் தண்டித்ததாக ஞாபகமிருக்கிறது. ஆதலின் நான் அன்று ரூல் தடியைக் கொண்டு அடித்தது என் குற்றமா அல்லவா என்பதைப் பற்றி முடிவு செய்யவும் முடியாதவனாகவிருக்கிறேன். அது கோபத்தினாலும், தண்டிக்க வேண்டுமென்னும் எண்ணத்தாலும் செய்யப்பட்டதாதலால் நியாயமானதல்லவென்றே நினைக்கிறேன். இதனால் நான் மாணவர்களைத் திருத்தும் வகையில் சரியானதும், நல்லதுமான வழிகளைக் கற்றுக் கொண்டேன். பிரஸ்தாப சம்பவம் போன்ற விஷயங்களில் திடீரென்று எவ்வாறு அந்த முறைகளை உபயோகிக்க முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. மேலும் அந்த மாணவனும் விரைவில் அச் சம்பவத்தை மறந்துவிட்டதுடன் நல்ல திருத்தத்தைத் தன்னிடம் காட்டியதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் அச் சம்பவம் எனக்கு மட்டும் ஒரு உபாத்தியாயர் தன் மாணவர்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதை விளக்கிற்று. இச் சம்பவத்துக்குப் பின்னரும் மாணவர்கள் ஒழுங்குக் குறைவாக நடந்து கொண்டதுண்டு. ஆனால் நான் அவர்களைக் கொடுமையாக தண்டித்ததில்லை. எனவே மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் ஆத்ம ஞானத்தைப் புகட்ட முன் வந்ததால், ஆத்ம ஞானத்தின் சக்தியை நானே அதிகம் அறிந்து கொண்டேன்.

---

**நாம் பிறரை எவ்வளவுக்கு மன்னிக்கிறோமோ, அவ்வளவுக்குக் கடவுளும் நம்மை மன்னிக்க மனது இறங்குவார்.**

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## மகாத்மாவின் மணி மொழிகள்.

வீண் பேச்சு பேசிக் கொண்டு செயலில் காட்ட முன்வராமலிருப்பது நலமன்று. வீரமான பிரசங்கங்கள் புரிந்த பலர் தாமாகவே சிறை சென்றிருக்கின்றனர். தூங்கிக் கிடப்பவர்களை விழிக்கச் செய்வதற்குப் பிரசங்கங்கள் அவசியமே. நம்முடைய பிரசங்கங்களைப் பிரிட்டிஷ் அதிகாரிகள் பொருட்படுத்தாமல் 'வேண்டுமானால் செயலில் காண்பியுங்கள்' எனக் கூறுகின்றனர். இதை நாம் அறிந்து கொள்ளும் வரையில் நம்முடைய பேச்சுக்கு மதிப்பில்லாது போய் விடும். சிறையிலிருக்கும் பலர் கூறும் சபதங்களைக் கேட்டு ஜெயிலதிகாரிகள் நகைக்கிறார்கள்.

* * *

மயானத்தில் எத்தன்மையதான அமைதி நிலவுமோ அதையே பிரிட்டிஷ் அமைதி ஒக்கும். பிரிட்டிஷ் ஆட்சியில் நடைப் பிணங்கள் போலவே நாம் காலத்தைக் கழித்து வருகிறோம். இந்த சயித்தான் அரசாங்கம் இந்தியாவை எல்லா விதத்திலும் பாழ்படுத்தி விட்டது. பிரிட்டிஷ் நியாய ஸ்தலங்களில் நீதியாவது, உண்மையாவது காணப்படவில்லை.

* * *

என்னுடைய கொள்கையோ அஹிம்சை. எந்த நிலைமையிலும் அஹிம்சையைக் கையாளுவேன். அஹிம்சை முறையை எதுவும் வெல்ல முடியாது. சுயேச்சை என்பதை விட பெரியதோர் நிலைமையை அடைய வேண்டு மென்பதே எனது ஆவல். பிரிட்டிஷார் இந்தியாவின் பொருளைக் கொள்ளை கொண்டு போவதை நிறுத்தி இந்தியா விடுதலை பெற வேண்டு மென்பதே எனது நோக்கம். மற்றத் தேசங்களுக்குச் சமமாக வாழ்வதற்கு இந்தியாவிற்கு உரிமை யுண்டு.

* * *

பிரிட்டிஷ் அரசாங்கம் ஆட்சி புரிவது போல் சுதேச ராஜாக்களும், மகா ராஜாக்களும் ஜனங்களை வாட்டி வருகின்றனர். ஜனங்களை அடக்கியாளும் பொருட்டு ஏராளமான பொருட் செலவில் ராணுவப் படைகளை சர்க்கார் வைத்திருக்கின்றனர். ஆயிரக் கணக்கான ராணுவச் சிப்பாய்கள் சர்க்கார் செலவில் மதுபான மருந்தி விட்டு கூத்தாடிக் கொண்டிருக்கின்றனர்.

* * *

ஆத்ம ஞானத்தை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு நற்குண நல்லொழுக்கமும், கடவுள் அறிவும், தன்னம்பிக்கையும் வேண்டும். ஆத்ம ஞான மில்லாமல் இதா விதமான கல்வி முறை யெல்லாம் மாணவர்களுக்குப் பயன்படா தொழிவதுடன் சிற்சில சமையங்களில் தீமையும் தோற்றுவிக்கின்றது.

---

## ஸ்ரீமான் முதலாளி மு. மு. முத்துச்சாமி நாடார் ஞாபகச்சின்ன வாசகசாலை, அருப்புக்கோட்டை.

இதனுதாவில் 23—1—28-ல் இரவு 11-மணிக்கு இதன் ஹாலில் நிர்வாகக் கூட்ட மொன்று கூடியது. அதில் இவ்வாசகசாலையின் 7-வது வருடப் பூர்த்தி விழாவை நாளது தை மீ 30 உயில் பாளையங்கோட்டைவக்கீலும், சென்னை சட்டசபை மெம்பருமான ஸ்ரீமான் தானியல் தாமஸ் நாடாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடத்துவ தெனத் தீர்மானித்து சகல வேலைகளும் நடந்து வருகின்றன வெனக் காரியதரிசி எழுதுகிறார்.

---

உனக்குப் பிரியமில்லாத ஒரு நல்ல காரியத்தை மற்றவர் செய்து கொண்டு போக விட்டு விடுவதே பெரிய மனிதத் தன்மை. நீ இடையே புகுந்து கெடுக்கப் பார்ப்பது உன் பெரிய தன்மைக்குச் சரியல்ல.

## தேவஸ்தான மசோதாவைப் பற்றிய உண்மையும் நாடார் மக்கள் உணர வேண்டுவதும்.

அன்பர்களே!

இந்து மத பரிபாலன சட்டமாவது பொதுவாகப் பிராமணருடைய அட்டூழியங்களை அடக்கும் சட்டமாக விருந்த போதிலும், பிராமணரல்லாதாருடைய சுயமரியாதைக்குப் பங்கம் விளைவிக்கக் கூடியதாக விருக்கிறது என்பது வெள்ளிடைமலை.

பொதுவாய் தேவஸ்தானமானது பிரதேச கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட கமிஷனராலும், போர்டாராலும், ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படும் ட்ரஸ்ட்டிகளாலும் வழக்கம் சம்பிரதாயம் என்னும் விதிப்படி பரிபாலிக்கப்பட்டு வரும்.

கமிஷனர் பதவிக்கு இந்தியன்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனை கிடையாது. (இ. ம. ப. ஆக்ட் 2-வது அத்தியாயம் 8-வது செக்ஷன் 1-வது 2-வது டிவிஷன்களைப் பார்க்கவும்.)

போர்டாரையும் கமிஷனரையும் தேர்ந்தெடுப்பதை ஜனங்களுக்கும் அவர்களால் தேர்ந்தெடுக்கப் படும் ட்ரஸ்ட்டிகளுக்கும் அதிகாரமில்லாமில் சர்வ அதிகாரமும் கவர்ன்மெண்டுக்கே இருக்கிறது. (2-வது அத்தியாயம் 8-வது செக்ஷன் 3-வது டிவிஷனையும் 9-10-11-வது செக்ஷன்களையும் பார்க்கவும்.)

இந்துக்கள் என்போர் யாவரும் கோவில் தரிசனம் செய்யமுடியாதென்பதை 75-வது செக்ஷன் காட்டுகின்றது.

மேற்சொல்லியவைகள் பொது விஷயங்களென மதித்து ஷெ சட்டத்தால் நாடார் மக்களுக்கு உண்டாகும் நன்மை தீமைகளைப்பற்றி யெழுதுவோம்.

பொதுவாக நாடார் மக்களின் தேவஸ்தானமானது போர்டாரால் விலக்கப் பட்டதாகி விட்டதைக் குறித்து போர்டாருக்கு நன்றியறிதல் செலுத்த வேண்டியது நியாயமெனினும், இன்னும் சில கஷ்டங்கள் நம்மை விட்டகலவில்லை யென்பதையறிய என் மனச் சாக்ஷியானது நன்றியறிதலுக்கு இடங் கொடுக்கவில்லை யென்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்மில் சிலர் நமது தேவஸ்தானமானது விலக்கப்பட்டதாகி விட்டதென்றும், வருமான வரி சம்பந்தந் தவிர மற்றைய சம்பந்தமில்லை யென்றும் கண்மூடித் தனமாகப் பிரசாரஞ் செய்து வருகின்றனர். உண்மையை நோக்குமிடத்து விலக்கப்பட்ட தேவஸ்தானமானது போர்டாரின் அதிகாரத்துக்குள் அடங்கியுள்ளதென்றும் வருஷா வருஷம் பட்ஜெட்டும் (வரவு செலவு கணக்கும்) ரிஜிஸ்டரும் அனுப்ப வேண்டுமென்றும் ட்ரஸ்ட்டியாரை நீக்கவும், நியமிக்கவும், அல்லது தானே மேல்பார்க்கவும், மீதியாகும் பணத்தை கல்வி, தர்மம் முதலியவைகளுக்கு செலவுசெய்யவும் அதிகாரமிருக்கிறதென்பதை ஒவ்வொரு நாடாரும் அறிய வேண்டுகிறேன்.

நம்முள் அநேகர் நம் தேவஸ்தானத்தார் வருமானவரி கட்டியவுடன், பட்ஜெட்விபரத்தை வரவுக்கும் செலவுக்கும் சரியாகவைத்து மிச்சமில்லாமல் காட்டிவிடலாமென்றும், வேறு கஷ்டங்கள் இல்லையென்றும் சாதிக்கின்றனர். உண்மையில் சிக்கனத்திற்கு இடமும், பட்ஜெட்டைத் தள்ளிவிடவும், குறைக்கவும், கூட்டவும் அதிகாரமுமிருக்கிறது என்பதை ஆழ்ந்த கருத்துடன் படித்த எவருக்கும் விளங்காமற் போகாது.

மேற்சொல்லிய விஷயங்கள் நாடார்களைப் பாதிக்குமா என்பதை அறிய என்சிற்றறிவுக்கு எட்டிய விதிகளை எடுத்துக் காட்டுகிறேன்.

1. விலக்கப்பட்ட கோவிலானது போர்டார் அதிகாரத்திற்குட்பட்டது என்பதையறிய இ. ம. ப. ஆ. 2 அத்தியாயம் 14-வது செக்ஷனைப் பார்க்கவும்.

2. பட்ஜெட் விபரத்தைப் பற்றி 6-வது அத்தியாயம் 57, 58, 59-வது செக்ஷன்களைப்பார்க்கவும்.

3. ரிஜிஸ்டர் மூலம் சிக்கனச் செலவு செய்யவேண்டுமென்பதையறிய 4-வது அத்தியாயம் 34-வது செக்ஷன் 1-வது பிரிவு வியும், எப்பும், இரண்டாவது டிவிஷனையும் பார்க்கவும்.

செலவு விபரத்தை வருஷா வருஷம் கூட்டவும் குறைக்கவும் அதிகாரமிருக்கிறதென்பதையறிய 4-வது அத்தியாயம் 35-வது செக்ஷன் 1, 2, [illegible] டிவிஷன்களைப் பார்க்கவும். மீதியாகும் பணத்தை கல்வி, மதம், தர்மம் முதலியவைகளுக்கு செலவு செய்யப்படுமென்பதையறிய 7-வது அத்தியாயம் 63-வது செக்ஷனைப் பார்க்கவும்.

பெரியோர்களே! எது எப்படிப் போயினும் பண விஷயத்தில் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டியதால் மாஜி சட்டசபை மெம்பரான கனம். ஆறுமுகநாடார் அவர்கள் தனிப்பட்டவர்களுடைய கோவிலில் மீதியாகும் பணத்தை அந்தந்த ஜாதியாருக்கே செலவு செய்யப்பட வேண்டுமென்று கடைசியாகக் கொண்டுவந்தார். சுமார் 30 திருத்தங்களை அடித்த கனம் பனகால் அரசர் கடைசியாக "கூடிய மட்டிலும்" என்ற திருத்தத்துடன் ஏற்றுக்கொண்டார். "கூடிய மட்டிலும்" என்ற பதத்தின் அருத்தத்தை அறிய உங்களுக்கே விட்டு விடுகிறேன்.

இறுதியாக நாம் கவனிக்கவேண்டியது யாதெனில், வழக்கம், சம்பிரதாயம் என்பதை எடுத்துவிட வேண்டும். அப்படியல்லாத விஷயத்தில் நம் பணமாவது பிறருக்குப் போகவிடாதபடி கூடிய மட்டிலும் என்பதை எடுத்து விட்டு முற்றிலும் அந்தந்த ஜாதியாருக்கே செலவு செய்யப்படவேண்டு மென்று திருத்தவேண்டும்.

நம் சங்கத்தலைவரையும், உபதலைவரையும், காரியதரிசிகளையும், மற்றும் பெரியோரையும் கேட்டுக்கொள்ளுவது யாதெனில், இந்துக்கள் எனப்படுவோர் எல்லாரும் சமத்துவமாய் ஆலய தெரிசனம் செய்யவும், வழக்கம், சம்பிரதாயம் என்பதை எடுத்துவிடவும் பாடுபடல் வேண்டும். அஃது முடியாதுபோயின் நம் பணத்தை நம்மக்களுக்கே செலவு செய்யவேண்டுமென்பதை வற்புறுத்துவது நம் தலைவர்களின் கடமையென்பதை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ப. வே. ச. பழனிச்சாமி,
விருதுநகர்.

---

## சீன தேசத்தில் பஞ்சம்.

ஆயிரக் கணக்கான ஜனங்கள் வேர்களையும் இலைகளையும் தின்று காலங் கழிப்பதுடன் பலர் ஆகாரத்துக்குப் பதிலாகத் தம் குழந்தைகளை விற்கிறார்களாம். சர்வதேச பஞ்சக் கஷ்ட நிவர்த்தி கமிஷன் அறிக்கையில், வாலிப வயதுள்ள பெண்களை 15 ரூபாய் முதல் 75 ரூபாய் வரையுள்ள கிரயத்துக்கு விற்கிறார்களென்று காணப்படுகின்றது. நிசினன் என்னுமிடத்தில் 25 ஆயிரம் சீனர்களுக்கு உதவி செய்யப்பட்டு வருகிறது. தர்ம ஸ்தாபனங்கள் தினசரியும் இலவச சாப்பாட்டைக் கொடுக்கின்றன. மார்ச்சு மாதத்துக்குப்பின் குளிரும் சேர்ந்தால் அப்பிரதேசங்களிலுள்ள ஜனங்களின் துக்கம் அதிகரிக்குமென்று சொல்லப்படுகிறது.

---

## மதிப்புரைகள்.

### "குலாபிமானி"

இப்பெயர் புனைந்த பத்திரிகையில் முதற் சஞ்சிகை யொன்று கிடைக்கப் பெற்றோம். இது திருச்சினுப்பள்ளியினின்றும் ஸ்ரீமான் ஏ. எம். முத்துசாமி பிள்ளையவர்களின் பத்திராதிபத்தியத்தின் கீழ் வெளி வந்திருக்கிறது. இது ஒரு இனிய செந்தமிழ் மாதாந்தப் பத்திரிகையாகும். ஆறு நாட்டு வேளாளர்களின் அபிவிருத்தியைக் குறித்து தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. எனினும் தேச நன்மை கோரும் தோரணையில் எல்லா சமூகங்களின் முன்னேற்றங்களையும் தாங்கி நிற்கவே இதன் கருத்து. விஷயங்களனைத்தும் ருசிக்கத்தக்கனவா யிருக்கின்றன. வேளாள மரபினோர் வரலாறு, பெருமை முதலியனவும், அருமையான கட்டுரைகளும், ஆசியக் கொத்துகளும், சமாச்சாரக் குறிப்புகளும் பொறிக்கப் பெற்றிருக்கின்றன. புஸ்தக ரூபத்தில் 52 பக்கங்களுடையது. வெள்ளிய தாளில் தனத்த அட்டை யுடன் அச்சிடப்பட்டிருக்கிறது. வருடத்திற்குச் சந்தா ரூபாய் 3—0—0. ஆறு நாட்டு வேளாளர்கள் இதை அவசியம் ஆதரித்து வரக் கடப்பட்டுளார்கள். இது நீடு வாழ்க. தேவையானவர் "ஏ. எம். முத்துசாமி பிள்ளை, பத்திராதிபர், "குலாபிமானி" சின்னக் கடைத் தெரு, திருச்சினுப் பள்ளி" என்ற விலாசத்திற் கெழுதிக் கொள்ளவும்.

ஃ ஃ

### "கிராமானுகூலன்".

இப் பத்திரிகையின் 2-வது வருட 3-வது சஞ்சிகை யொன்று கிடைக்கப் பெற்றோம். இது கும்பகோணத்தில் நடை பெறுகிறது. ஸ்ரீமான் என். ஆபத்சகாய ஐயர்வர்கள் இதன் ஆசிரியராவர். இது தன் பெயருக் கேற்ப கிராமாபி விர்த்தியில் முனைந்து உழைத்து வருகிறதா யிருக்கிறது. கிராமவாசிகளுக்கு உற்ற துணையாகும். மாத மொரு முறை வெளியீடு செய்யப் படுகிறது. வருடச் சந்தா ரூ 2-0-0. இது பல்லாண்டு வாழ்வு கொள்ளுமாக.

---

## காலண்டர்களின் வரவு.

1928-ம் வருட ஆரம்ப முதல் இதுகாறும் நம் மித்திரன் காரியாலயத்திற்கு ஸ்ரீமான்களான சென்னை எஸ். குருசாமிநாடாரவர்கள், ஒலவக்கோடு க. கு. பொன்னப்ப நாடாரவர்கள், எப். எம். எஸ்—ஜோஹூர்பாரு எஸ். கோவிந்தசாமி நாடாரவர்கள், சென்னை நெல்ஸன் கம்பெனியார், மதுரை, ப. வ. சோமசுந்தர நாடாரவர்கள் ஆகியவர்களிடமிருந்து காலண்டர்கள் அனுப்பப் பெற்றிருக்கின்றன. அவை யனைத்தும் எமது மனமார்ந்த வந்தனத்துடன் பெற்றுக் கொண்டோ மென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

## தேவை.

விருதுநகர் "க்ஷத்திரிய பெண் பாடசாலை" க்கு லோயர் செக்கண்டரி ஹையர்கிரேடுட்ரயிண்டு உதவி உபாத்தினிகள் நான்கு பேர்கள் தேவை. இஷ்ட முள்ளவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு அப்ளிக்கேஷனுடன் சர்ட்டிபிகேட் அனுப்பி சம்பள விபரம் தெரிந்து கொள்ளலாம்.

பெ. சிதம்பர நாடார்,
செக்ரெட்டரி,
"க்ஷத்திரிய பெண் பாடசாலை"
விருதுநகர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம

சேதமிலாப் பொருட்கு சேர்வி-
த்தப் பிரிவை நீக்கியக்கத் செய்யுஞ்

சோதியை மாந்தா லொளியைமனத விழ
நிறைவான தூய வாழ்வைத்

தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

நாடார்குலமித்திரன்

பிரபவ ஆடு தை மீ ௰௭ உ

## தமிழ் நாட்டில் இந்து-முஸ்லீம் விசாரம்.

நம் பாரத பூமியின் வடமாகாணங்களிற்றான் அடிக்கடி இந்து முஸ்லீம்களுக்குள் கலகமேற்படுவதைப் பார்த்துங் கேட்டுமிருக்கின்றோம். மலையாளத்தில் மாப்பிள்ளைக் கலவரம் நடந்த போது தென்னாட்டில் அதைப்பற்றி யாதொரு விசாரமுங் கிடையாது. சென்னைக் காங்கிரஸுக்குப் பிறகு சேலத்தில் அவ்விசாரம் அடிக் கோலி யுள்ளது. இரு தாப்புத் தலைவர்களும் சமாசத் தன்மைக்குப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுதும் இடையில் சில ஆசாமிகள் குட்டிக் கலவரங்கள் செய்தும், சொன்மாரி பொழிந்தும் மனதைப் புண்படுத்தி வந்திருக்கின்றார்கள். இதனால் நகரெங்கும் விசேஷ போலீஸ் பந்தோபஸ்துகள் செய்யும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இரு தாப்பாரின் வீர மொழிகள் வெளி வருவதை நோக்குங்கால் என்ன ஹானி நேருமோ! எந்த நேரத்தில் என்ன நடக்குமோவென்ற பெருங் கவலைக் கிடமாயுள்ளது. வெகு நாட்களுக்கு முன் நடந்த சேலம் ஜில்லாக் கலகத்தை நினைந்து இக் கலகமும் எங்ஙனம் வலுத்து விடுமோ; அன்றி தமிழ் நாடெங்கும் கொடி வீசிப் படர்ந்து விடுமோவென்று அனேகர் மிக வருந்தினர். பின்னர் இரு தாப்புத் தலைவர்களுடைய பெரு முயற்சியினாலே ஒரு விதமான சமாதானத்துக்கு வந்து விட்டார்களென்று தெரிய வருகிறது. இதுபோல் இக் கலவரம் ஆரம்பித்ததும் உடனே சமாசமாய் விட்டார்களென்று தேசியப் பத்திரிகைகளின் கொட்டை யெழுத்துப் பிரசுரங்களால் அறிந்தோம். மறு தினத்திலே சேலத்தில் இந்து முஸ்லீம் விசாரம்; மிகவும் கவலைக் கிடமான நிலைமை யெனும் பிரசுரங்களைப் பார்த்தோம். மீண்டும் சமாசமாய் விட்டதாக மறு பிரசுரங்கள் வெளியாகின. இது முற்றும் உண்மையாகவே இருக்கலாம். சமாசத் தன்மைக்குப் பாடுபட்ட தலைவர்களையும், சமாசமாய் விடவேண்டுமென்று இணக்கங் காட்டிய இரு தாப்புத் தலைவர்களையும் பாராட்டுகின்றோம். ஆனால் இவ் விசாரம் எவ்வளவோ சமாதானமாக முடிந்து கலகாஸ்பதம் மறைந்து போனாலும், அனேகருக்கு உள் மனப் புழுக்கம் இருந்து வரத்தான் கூடும். அப் புழுக்கம் புகைந்து மீண்டும் பற்றிக் கொள்ளாமல் சதாவும் தலைவர்கள் கண்ணோக்குதல் வேண்டும். ஏனெனில், விஷமக்காரர்கள் இரு தாப்பிலும் எப்போது மிருப்பர். அவர்கள் கலகங்களினால் வரும் கஷ்டங்களை அறியார்கள். மதத்தின் தத்துவங்கள் இன்னதென்றுணரார். சண்டை செய்து சாதிப்பதே ஜாதி மதாபிமானமென்று கருதுவார்கள். தலைவர்கள் எவ்வளவோ சமாசமாய் வாழ வேண்டுமென்று கருதித் தயாளமாயிருந்து வந்த போதிலும் மத விஷயத்தில் மூர்க்கமான போக்குடையவர்கள் எந்த நேரத்தில் தங்கள் கொள்கைக்குச் சாதகமான சந்தர்ப்பங் கிடைக்குமென்பதை எதிர் பார்த்திருந்து அக் காலம் வரும்போது தலைவர்களையோ, மற்றெவர்களையோ எதிர் பாராமல் தங்கள் பூண வேலையை ஆரம்பித்து விடுகின்றார்கள். இச் சம்பவம் இந்தியாவில் வெகு சகசமாய்ப் போய்விட்டது. இதை இழுத்து விட்டு வேடிக்கை பார்ப்பதே வாடிக்கையாகக் கொண்டவர்களும் ஒரு சாரிருக்கின்றார்கள். அவர்களும் இச் சம்பவங்களைக் காரணமாக வைத்துக் கொண்டு தங்கள் காரியத்தைப் பார்த்துக் கொள்வதும் சகசமாயிருக்கிறது. ஆகையால் இந்நாட்டில் இந்து முஸ்லீம் ஒற்றுமையில் இரு தாப்புத் தலைவர்களும் எப்போதும் விழிப்புடனிருந்து வர வேண்டிய தவசியமேற்படுகிறது.

சேலம் இந்து முஸ்லீம் விசாரம் சமாசமாய் விட்டதாகவும், அவை காங்கிரஸ் தீர்மானத்தின் பேராலென்றும் சில தேசியப் பத்திரிகைகள் வெற்றி கொழிக்கின்றன. அவர்கள் சந்தோஷ ஆரவாரத்தை யாரும் தடுப்பாரில்லை. காங்கிரஸின் போல் செய்யும் எத்தனையோ விளம்பரங்களில் இதுவும் ஒன்று என்பதை உண்மை கண்டாருள்ளம் உணராமற் போகாது. ஒரு நாளுமில்லாத திருநாளாகத் தமிழ் நாட்டில் இந்து முஸ்லீம் விசாரத்திற்கு அடிகோலியது சென்னைக் காங்கிரஸ் தீர்மானமென்ற உண்மையை ஒருவரும் மறைக்க முடியாது.

---

## பிராமணரல்லார் இயக்கமும், நாடார்களும்.

தற்போது தமிழ் நாட்டிடை சாதி மடமை யகற்றத் தோன்றி சக்தி மிகுந்து தழைத்து வளராநின்ற பிராமணரல்லாதார் இயக்கம் பெரும் புனித வியக்கமாகும். இவ்வியக்கம் நாட்டுக்குள்ளே காட்டுத்தீப்போல் பரந்து சாதி யிறுமாப்பினை தகிக்கட்டும். எல்லாரும் ஒன்று; ஏற்றத் தாழ்வில்லை; எல்லாருக்கும் ஒரு காரியத்தில் சுதந்திரமுண்டு என்ற தத்துவம் நிலவட்டும்.

ஆனால் இதற்கமைந்த பெயருக்கேற்ப பிராமணரல்லார் ஒன்று கூடி பிராமணர்களை உன்னத பீடத்திருந்து கீழிழுத்துத் தம் நிலையில் வைத்துக்கொள்வதே இதன் லக்ஷியம் என்பதற்கு வந்துவிடக் கூடாது. யோசிக்குமிடத்து பிராமணர்கள் செய்துவரும் கொடுமைகளைப்போல் பிராமணரல்லாதாரும் தமக்குள் தாழ்ந்த வகுப்பாரெனப் படுவோர்களுக்குக் கொடுமைகள் செய்யாமலில்லை. பிராமணர்களை மட்டும் சாதி பேத ஹோதாவில் நிந்திப்பதற்கு நியாயமில்லை. பிராமணரல்லாதாரும் நிந்தனைக்குரியவராவர். இது பிராமண சகவாசத்தோஷத்தால் சேர்ந்தது எனச் சமாதானம் கூறிவிட்டு இன்னனையாரை விடுத்து ஒரே யடியாய்ப் பிராமணர்களைத் தாக்குவது எவ்வளவும் உசிதமாகத் தெரியவில்லை. பிராமணர்கள் இதையேதான் அடிக்கடி சுட்டிக் காண்பிக்கின்றார்கள். இதை நாம் மிகவும் கவனிக்கவேண்டும்.

பிராமணரல்லாதார்களுக்குள்ளே ஓர் வித உறுதியான ஐக்கியம் இல்லாது பிராமணரல்லாதார் எல்லாம் ஒன்று என்று வாயளவில் வழுத்திவிட்டுப் பிராமணர்களைத் தாக்கப் புறப்படுவது கேலிக்கிடமான செய்கையாகும். பிராமணரல்லாதாருக்குள்ளே தாழ்ந்த வகுப்பினரெனப்படும் ஆதி திராவிட மக்களை இப் பிராமணரல்லாதாரில் மேற்குலத்தார் என்று சொல்லிக் கொண்டு திரிபவர்கள் எந்நிலையில் வைத்து வருகிறார்கள்? சிற் சில விடங்களில் தீண்டாமை விலக்கி அவர்களுக்கு சம உரிமை யளித்திருப்பதாக வெளி வந்திருக்கிறது. சில விடங்களில் தமது கக்ஷி ஆக்கத்திற்காக வெளிவேஷமாக சமபந்தி போஜனம் சம இருக்கை முதலியன மூலம் ஐக்கியத்தைக் காட்டிக் கொள்கிறார்கள். பல விடங்களில் ஆதிதிராவிடர்களைப் பற்றிய பேச்சே கிடையாது.

இந்நிலையிலிருந்து கொண்டு நாங்களெல்லாரும் ஒன்று; தாங்களும் எமக்குச் சமமாயிருக்க வேண்டுமென பிராமணர்களைப் போய் மோதுவது பெருமையல்ல. பிராமணரல்லாதாருக்குள் உண்மையான சமத்துவ உணர்ச்சியிருக்குமேல் முதன் முதலில் தமக்குள்ளே தாழ்த்தப்பட்டிருப்பவர்களைத் தூக்கிவிட்டுப் பின் தம்மைத் தாழ்த்திவைத்திருக்கும் பிராமணர் கொட்டத்தை யொடுக்கவேண்டும். இதுவே நியாயத்திற்கொத்தது. இதற்குப் புறம்பான எச்செய்கையும் துவேஷம் கொண்டதேயாகும்.

நிற்க, இதுசம்பந்தமாக நாடார்களைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். நாடார்கள் க்ஷத்திரிய குலோற்பவர்கள். இவர்கள் பூர்வகாலந்தொட்டு ராஜரீகம் செய்து வந்து இடைக்காலத்தே தம் நிலை தவறி பல துவேஷ வகுப்பினர்களால் அமிழ்த்தப்பட்டு வந்தார்கள். கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே யென்பதற்கிணங்க தமது ஆற்றல் அறிவு மிகுதியால் துவேஷமத்தனையும் ஜெயித்து தற்போது ஒரு குறையுடனிருக்கிறார்கள். அக்குறையும் வேண்டுமானால் சீக்கிரம் போக்கிக் கொள்வார்கள். ஆனால் அது பற்றியவர்களுக்குக் கவலையில்லை. கையில் வெண்ணெய்யை வைத்துக்கொண்டு நெய்க்கலைபவர்கள் இவர்களில்லை. ஆனால் தேசமுன்னேற்ற காரணமாய் அக்குறையைத் தவிர்க்க மனங்கொண்டேயிருக்கிறார்கள்.

இந்த நாடார்களுக்கு கொடுமைகள் புரிந்துவந்த—இன்னும் ஒரு சிலவிடங்களில் புரிந்து வருகிற சாதியார்கள் யாரென்றால் அவர்கள் பெரும்பாலும் பிராமணரல்லாதார்களே யெனக்கூறுவோம். அவர்களே இப்போது பிராமணரல்லார் இயக்கம் உண்டுபண்ணியிருக்கிறவர்கள். ஆகையால் இவர்களுடன் நாடார்கள் எம்மாதிரி நடந்து கொள்ள வேண்டுமென்பது கவனிக்கற்பாலது. பரஸ்பர ஐக்கியம் குடிகொண்டிருக்கிறதாவென்பதில் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். பழைய துவேஷம் முற்றுமொழிந்துவிட்டால்தான் நல்லது. அல்லது தோளிலிருந்து செவியைக் கடித்தமாதிரி வந்துவிடும். தோஷம் தொன்றும் தோன்றாதிருப்பின் இவ்வியக்கத்தில் ஈடுபட வேண்டியதுதான். அவ்வீடுபாட்டை உயரிய நோக்கத்தில் உத்தம வழியில் செலுத்த வேண்டும். மேற் கூறியதேபோல் பிராமணரல்லாதாரியக்கத்தை முதலில் ஆதிதிராவிட மக்களுயர்வுக்குத் திருப்ப பாடு கொளல்வேண்டும். பிராமணரல்லாத சகல வகுப்பினர்களும் ஒருவருக்கொருவர் ஏற்றத்தாழ்வின்றிப் பூரண ஒற்றுமை நிலவியிருக்கச்செய்துகொண்டு பிராமணரை சமத்துவக் கட்டடத்திற்கிழுப்பதுதான் நியாயமான வெற்றிதரும் என்பதை பிராமணரல்லாவியக்கத்தார் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளட்டும்.

ஓர் நாடார் குலத்தவன்.

---

# குறிப்புகள்.

### தொவுஞ்சை நாடார்கள்.

பர்மா தேய தொவுஞ்சை நகர் வாழ் நாடார்கள் பலவித வியாபாரங்களிலும் பிரவர்த்தியாகி நன்னிலையிலிருந்து வருகிறார்கள். திரைகடலோடி திரவியம் தேட அங்கு புக்கிய அவர்கள் நமது குலப்பிரகாசம் கோரி ஒற்றுமையுடன் பொதுநலக் காரியதாதிகளாகிய மகமை, கோவில், பள்ளிக்கூடம் முதலியன நிறுவி விளங்கி வந்து, சிறிது காலந்தொட்டு சில மனமார்ச்சரியங்களால் ஒற்றுமை குலைந்து பொதுக்காரியங்கள் சீர்கேடுற்றிருக்கப் பார்த்திருக்கிறார்களென்பதை யறிந்து விசனிக்கின்றோம். தேசமெங்கணும் ஒற்றுமை ஒற்றுமையெனச் செவிடுபட முழங்கி வருமிது போது தொவுஞ்சை நாடார்கள் ஆக்கப்பட்டிருந்த ஒற்றுமையை நீக்கம் செய்திருப்பதேனோ! அற்பக்காரணங்களால் அரிய காரியங்கள் தடைப்பட்டுப் போகக்கூடாது. எத்தகைய மனமார்ச்சரிய மிருப்பினும் அதையொழித்து மீண்டும் ஒற்றுமைகொண்டு காரியங்கள் செவ்வனே நடைபெறப் பிரமுகர்கள் கவனிக்கவேண்டும். விரைவில் ராசியேற்பட்டு ஒற்றுமை மிளிரி பொதுக்காரியங்களை வாடிய பயிர்கள் மழை நீருண்டதேபோல் செழிப்புறச் செய்வார்களென நம்புகிறோம்.

### நன்கொடைகள்.

நம்மித்திரன் அபிவிர்த்தியைக் கோரி ஸ்ரீமான்களான கல்லூருணி க. அ. புன்னைமுத்து நாடாரவர்கள் தாமியற்றியதும் பிரதி யொன்று 4 அணா விலையுள்ளதுமான "பக்தியின்பப் பஜனாமிர்தம்" எனும் கீர்த்தனைப் புஸ்தகங்கள் 25ம், கொளும்பு க. ம. தேவசகாய நாடாரவர்கள் கிறிஸ்து நாதர் பிறந்த தின வைபவத்தை முன்னிட்டு ரூ 1-0-0ம், திருநெல்வேலி ஜில்லா முன்னீர்ப் பள்ளம் போஸ்டு ஆரைக்குளம் ந. சா. பொன்னையா நாடாரவர்கள் மித்திரன் அதிபரின் சமீபத்திய தென்னாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின் போது ரூ 2-0-0ம் நன்கொடைகளாக அளித்துளார்கள். இவற்றை சந்தோஷத்துடன் பெற்று மித்திரனுக்கு வரவு செய்து கொண்டு எமது முழுமனதான வந்தனத்தைச் செலுத்துகிறோம். இம்மாதிரி பல அபிமானிகளின் உதவியை மித்திரன் எதிர்பார்த்திருக்கிறான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

டென்மார்க் தேசத்தில் புதமாதிரியான புகைக் கூண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவை ஆகாயக் கப்பல்களை நாசமாக்கக் கூடியன. ஆகாயக் கப்பல் யுத்தம் உண்டாயின் இக்கூண்டுகளை கீழேயிருந்து மேலே தூக்கிவிட்டால் கப்பல்களைத் தகர்த்தெறிந்துவிடும்.

*　*

பொருள்களை 12000000 மடங்கு பெரியதாய்க் காட்டும் அணுதரிசினி (மைக்ராஸ்கோப்) கண்ணாடி நோய்ப் புழுகு ஆராய்ச்சியில் உபயோகப்படுகிறதாம்.

*　*

உலகில் மிகப் பெரிய சிலந்திப் பூச்சி சுமத்ராதீவில் இருக்கிறதாம். அதன் உடம்பின் சுற்றளவு 9 அங்குலமாம். அதன் கால்கள் 17 அங்குல நீளமாம்.

*　*

ஒரே சமயத்தில் 7000 ஜனங்கள் தங்கக்கூடிய அளவு நிழல் பரப்பும் ஆலமரங்களிருக்கின்றனவாம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார் மகாஜன சங்கம், மதுரை.

1928-ஹூ ஜனவரி மீ 16 உ சங்கம் ஹாலில் "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான் ரூ. ஆ. முத்து நாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் மாலை 7 மணிக்குச் சங்கம் கௌன்ஸில் மீட்டிங் ஆரம்பமாயிற்று.

மதுரை ஸ்ரீமான்களான், பா. ம. பாண்டிய நாடார், ப. வ. சோமசுந்தர நாடார், சிவ. அ. வால சுப்பிரமணிய நாடார், வி. கே. கருப்பண நாடார், பழ. சு. கந்தசாமி நாடார், பி. வாழவந்த நாடார் பி. ஏ., பெ. ச. பெரியசாமி நாடார், மு. சுடலைமுத்து நாடார், ப. ரா. முத்துச்சாமிநாடார், மா. வேலு நாடார் ஆகியவர்களும், விருதுநகர் ஸ்ரீமான்களான, சி. சிவசங்கரநாராயண நாடார், பெ. சி. சிதம்பர நாடார் ஆகியவர்களும், சாத்தூக்குடி ஸ்ரீமான் ப. அ. குமரவேல் நாடாரும், அருப்புக் ஸ்ரீமான் சொ. ஆ. சொக்கலிங்க பாண்டியரும் ஆஜராயிருந்தனர்.

1. 1927—ஹூ ஏப்பிரல் மீ 1 உ முதல் டிசம்பர் மீ 31 உ யோடு முடிந்த மாதங்களில் செய்த வேலைகளையும், வரவு செலவு கணக்குகளையும் பற்றிய ரிப்போர்ட் காரியதரிசிகளால் வாசிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது.

2. வசக்கட்டுக் கணக்கில் பாக்கியிருக்கும் ரூபாய்களை காரியதரிசிகளின் யுக்தானுசாரப்படி செலவு எழுதிக் கொள்ள அதிகாரம் கொடுக்கத் தீர்மானிக்கலாயிற்று.

3. அடியிற் கண்ட 10 ஆர்டினரி அங்கத்தினர்களை கௌன்ஸில் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கத் தீர்மானிக்கலாயிற்று.

மதுரை ஸ்ரீமான்களான க. முத்துக்குமாரு நாடார், ஜே. பி. கெனட் நாடார், எ. தானியேல் நாடார், எ. பொன்னையா நாடார் பி. ஏ., டி. ஆறுமுக நாடார் பி. ஏ. பி. யல்., மீ. சி. சுந்தர நாடார்—போடிநாயக்கனூர், கூ. தா. கூ. சின்னமணி நாடார்—திருமங்கலம், அ. ரா. ப. அரசப்பநாடார்—நாரைக்கிணறு, வி. தங்கையா நாடார்—புதூர்—நாகர்கோயில், கூ. மு. அ. வ. சண்முக நாடார்—மதுரை.

4. சங்கத்தின் நிர்வாகம் தீவிரமாய் நடைபெறுவதற்கு தலைவர், உப தலைவர், காரியதரிசிகள், பத்திராதிபர் முதலிய தலைவர்கள் கூடிய சீக்கிரமாய் நம்மவர்கள் வசிக்கும் இடங்களுக்குச் சுற்றுப்பிரயாணம் செய்து பிரசார வேலையை நடத்துவதற்குத் தீர்மானிக்கலாயிற்று.

5. (அ) 11-வது மகாநாட்டின் வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டு ஏக மனதாய் ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஆ) ஷை மகாநாட்டின் அறிக்கைப் பத்திரம் வாசிக்கப்பட்டு 12-வது பக்கத்தில் சிவகாசி வாழ் நாடார்களைப் பற்றிய விஷயத்தையும், 37-வது பக்கத்தில் கும்பகோணம் ஸ்ரீமான் வீ. சந்திர நாடார் அவர்களையும், அன்னவர் சகாக்களையும் பற்றி எழுதியிருக்கும் சில வார்த்தைகளையும் நீக்கி ஒப்புக் கொள்ளத் தீர்மானிக்கலாயிற்று.

6. திவான்பகதூர் ஸ்ரீமான் ஆர். ராமச்சந்திர ராவ் அவர்கள் "ஹிந்து" பத்திரிகையில் நமது சமூகத்தைப் பற்றி எழுதிய கட்டுரையைக் குறித்து "ஹிந்து", "சுதேசமித்திரன்" ஆசிரியர்களிடமிருந்தும், ஸ்ரீமான் ராமச்சந்திர ராவ் அவர்களிடமிருந்தும் வந்திருக்கும் சமாதானக் கடிதங்கள் வாசிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளலாகி, அவற்றை ரிக்கார்டு செய்து கொள்ளத் தீர்மானிக்கலாயிற்று.

7. ஸ்ரீமான் ந. ர. க. ரங்கசாமி நாடார் அவர்களிடமிருந்து வந்த ஜில்லா போர்டு, தாலுகா போர்டுகள் விஷயமாய் எழுதியிருந்த கடிதம் வாசிக்கப் பெற்றது. கோயம்புத்தூர் ஜில்லா போர்டு, தாலுகா போர்டுகளில் நாடார் குலப் பிரதிகளை நாமினேஷன் மூலம் நியமனம் செய்யப் போர்டு பிரஸிடெண்டுகளைக் கடிதம் மூலம் கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கலாயிற்று.

வந்தனோபசாரத்துடன் இரவு 11-30 மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

## செய்தித் திரட்டு.

சுயமரியாதைப் பிரசாரம் செய்து வரும் திருநெல்வேலி ஸ்ரீமான் கே. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் இவ்வருப்புக்கோட்டைக்கு விஜயமாக உள்ளூர்ப் பிரமுகர்கள் பலரின் ஏற்பாட்டினால் 27-1-28ல் இரவு 7-மணிக்கு "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான் ரூ. ஆ. முத்து நாடாரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் தாதங்குளம் விநாயகர் கோவிலுக்கு அருகில் ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு ஸ்ரீமான் பிள்ளையவர்கள் பிராமணக் கொடுமைகளை ஒவ்வொருவருள்ளத்தும் வேரூன்ற வெடுத்துரைத்து வெகு உருக்கமாய்ப் பிரசங்கித்தார்கள். அதையாதரித்து ஸ்ரீமான்களான் எஸ். மல்லையா செட்டியாரவர்களும், தி. கருப்பையா பிள்ளையவர்களும் பேசினார்கள். பின்னர் அக்கிராசனர் முடிவுரை முடிவெய்தியதும் நண்பர் சிவ. கு. சிவசுப்பிரமணியன் அவர்கள் வந்தனோபசாரம் கூறக் கூட்டம் இனிது கலைந்தது.

*     *

அமெரிக்கா நியுயார்க்கு நகர ஹாலின் முன் மிஸ். மேயோவின் "இந்திய மாதா" என்னும் புஸ்தகம் கொளுத்தப் பட்டது. அங்கே மிஸ். மேயோ பிரசங்கம் செய்தனள். விவாதத்திற்கு வர மறுத்து விட்டனள்.

*     *

புருஷியாவில் கிரிபால் தாஸியெனும் விதவை நாற்பது வருடகாலமாக யாதொரு அன்ன ஆகாரமும் தண்ணீருமின்றிப் பட்டினியிருந்து வருகிறாளென்றும், அப்படியிருந்தும் களைப்பொன்றுமின்றித் தினசரி வீட்டு வேலைகளைச் செய்தே வருகிறாளென்றும் சொல்லப்படுகிறது. இது கலியுக விபரீதமே.

*     *

டோக்கியாவில் பெரும் புயலுண்டாகி இசிகாவாவில் ஒரு பள்ளிக்கூடக்கூரை யடித்துக் கொண்டு போகப்பட்டு 5 மாணவர்கள் மாண்டார்கள்.

*     *

லண்டனில் பல வேலைகளிலும் இருந்து வரும் இந்திய சிப்பந்திகளின் பெயர் விலாஸ முதலியவற்றை ரகசியப் போலீஸார் அறிந்துவருகிறார்கள்.

*     *

அகில இந்தியப் பெண்கள் சாரணப் படையினருக்கு நாகபுரியில் லேடிபட்லர் ஒரு விருந்தளித்தார்.

*     *

கல்கத்தாவில் சென்ற வருஷத்தில் தெருக்களில் நடந்த விபத்துகள் மொத்தம் 2188 என்றும் அவைகளில் 2031 விபத்துகளில் ஜனங்களுக்கு காயமேற்பட்டதென்றும் தெரியவருகிறது.

*     *

லண்டனில் ஒரு பெரும் புயலுண்டாகி மேல்மாடியில் நின்ற ஒருவர் கீழ் விழுந்திறந்தும், பாட்டையில் ஓடிக் கொண்டிருந்த ஒரு மோட்டாரும் ஒரு மோட்டார் பஸ்ஸும் கவிழ்ந்தும் பலர் உயிர் துறந்தும் போயினர்.

*     *

அமெரிக்கக் கப்பற் படைப் புதிய திட்டம் பற்றி இங்கிலாந்து ஸெனட் சபை ஸ்ரீ பெரோ என்பவர் கண்டித்துப் பேசியிருக்கிறார். அவர் கண்டிப்பதற்குக் காரணம் அமெரிக்கக் கப்பற் படையைச் சார்ந்த ஸ்ரீபிளென்ஹெட் இங்கிலாந்துடன் யுத்தம் செய்ய வேண்டுமென்ற பான்மையில் பிரசங்கம் செய்திருப்பதே. இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் அரசாங்க தோரணையிலும், வியாபாரத் தோரணையிலும் நாளுக்கு நாள் பகைமையுற்றி வருவதால் இவர் பிரசங்கத்தை ஒரு எச்சரிக்கையாக மதித்து சச்சரவு நிகழாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டுமென இங்கிலாந்து அபிப்பிராயப்படுகிறது.

*     *

ஜிப்ரால்ட்டர் ஜல சந்தியை மொர்ஸிடிஸ் கிளெய்ட்ஸி எனும் மாது இரண்டாம் முறையாக நீந்த முயற்சித்து, கரை சமீபத்திலிருக்கும்போது களைப்பு மிகுந்து சுழலில் அகப்பட்டு உயிர்க்கு மன்றாடும்போது சிலர் காப்பாற்றினார்கள்.

*     *

லண்டன் வெள்ளச் சேத நிவாரண நிதிக்கு ரூ 40000 பவுன்கள் வசூலாகி யிருக்கின்றன. ஏழைகளுக்கு உதவி செய்யப்பட்டுவருகிறது.

*     *

நாகையில் ஒரு மோட்டார் சொந்தக்காரனும், அவ் வண்டியோட்டியும், ஒரு நாவிதனும் கூடி பட்டப்பகலில் 14-வயதுள்ள பெண்ணொருத்தியை மோட்டார் காரினுள்ளிற்றுத் தூக்கிச் சென்று பலவந்தப்புணர்ச்சி செய்ததாலேற்பட்ட காயத்தால் அம்மாது உயிர்நீத்தனள். சித்திரவதைக்குற்ற இப் பாவிகளின் செயல்தானென்ன! இக் காமிகள் மாதின் மரணத்திற்கு முன்னரே பிடிபட்டு போலீஸ் காவலில் இருக்கின்றனர்.

*     *

கொழும்பு சட்டசபை சுதேச மருந்தை விருத்திபண்ண ஒரு ஆலோசனை சபை ஏற்படுத்த ரூ 75000-0-0 அனுமதித்திருக்கிறது.

*     *

சென்னை சட்டசபையில் ராயல் கமிஷனைப் பகிஷ்கரிக்கத் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

*     *

பிரிட்டிஷ் தந்தி இலாகாவின் வருடாந்திர வரவு செலவு கணக்கு வெளியாயிருப்பதில் 13 லக்ஷம் பவுன்கள் நஷ்டம் எனத் தெரிகிறது.

*     *

ரங்கூனில் ஒரு இன்ஷூரன்ஸ் கம்பெனி தரகராயிருந்த பொம்மண்ட் என்ற ஆங்கிலர் அவ்வின்ஷூரன்ஸ் கம்பெனிக்குப் பர்மா நீக்குச்சிக் கம்பெனியாரிடமிருந்து வாங்கி வந்த ரூ4000-0-0 செலுத்தாமல் மோசம் செய்துவிட்டதாக 6-மாதக் கடுங்காவலும் ரூ 1000-0-0 அபராதமும் மாஜிஸ்ட்ரேட்டால் விதிக்கப்பட்டார்.

*     *

பத்வான் என்னுமிடத்தில் ஒரு உத்தியோகஸ்தர் ஒரு குழந்தையை சவுக்கினால் அடித்துவிட்டார் எனப் பத்திரிகைகள் பிரஸ்தாபப் படுத்திய தன் சம்பந்தமாக அவ்வுத்தியோகஸ்தர் மேல் சர்க்கார் என்ன நடவடிக்கையெடுத்துக்கொண்டிருக்கிறார் என்பது பற்றி பார்லிமெண்டின் அடுத்த கூட்டத்தில் கேள்விகள் கேட்கப்படுமெனத் தெரிகிறது.

*     *

மதுரை, ஸ்ரீமான் மாம்பழம்—வேல்சாமி கவிராயரவர்கள் இராமேஸ்வரத்தில் மண்டபக் கும்பாபிஷேகத்திற்குப் பிரயத்தம் பார்க்கச் சென்றிருந்த காலத்து சுரநோய் வாய்ப்பட்டு அங்கேயே நாளிது தை மீ 7 உ இரவு இறந்து போனார்கள்.

*     *

கைரோடி ஜானிரோவென்ற விடத்தில் ஒரு குடியானவன் மனைவிக்கு தாடியுடனும் மீசையுடனும் ஒரு குழந்தை பிறந்திருக்கிறதாம்.

*     *

மண்ணெண்ணெய்க் கம்பெனியார்களுக்குள் போட்டியுண்டாகி விலை குறைந்து வருகிறது. அக் கம்பெனியார்கள் தமக்குள் போட்டி முற்றுவண்ணம் பாதுகாக்க கவர்ன்மெண்டை யடுக்கின்றனர். ஜனங்களுக்கு நன்மை பயக்கும் இப்போட்டியில் சர்க்கார் தலையிடு கொள்ளலாகாதென இந்திய வியாபாரிகள் கூறுகிறார்கள்.

*     *

திருவாங்கூரிலிருந்து அயல் நாடுகளுக்கு வருஷந்தோறும் 105000 தோல்கள் அனுப்பப்படுகின்றன.

*     *

திருவனந்த புரத்தைச் சேர்ந்த கண்டகாட்டில் ஒரு கிறிஸ்தவ மாதுக்கு வயது 109 நடைபெறுகிறதாம். சுகமே வாழ்ந்து வருகின்றனராம்.

*     *

கள்ளிக் கோட்டையில் ஒருவன் தன் 3 பெண்குழந்தைகளை மலபார் கிரேட் இந்தியன் சர்க்கஸ் கம்பெனிக்கு விற்பனை செய்திருக்கிறான்.

*     *

திருவண்ணாமலையில் நாளிது ஜனவரி மீ 21 உ காலையில் பூகம்பம் ஏற்பட்டது. ஆனால் சேத மொன்றுமில்லை.

## கடம்பூர், "நாடார் சரஸ்வதி வித்தியா பெண்பாடசாலை" திறப்பு விழா.

27-1-28ல் மேற்படி கலாசாலை திறப்பு வைபவம் காலை 9½ மணிக்குமேல் 10 மணிக் குள்ளாக கோவில்பட்டி டிவிஷனல் ஆபீசர் ஸ்ரீமான் எஸ். சாமுவேல் பிள்ளை அவர்களால் நடத்தப் பெற்றது.

அவ் வமயம் ஸ்ரீமான்களான் கோவில்பட்டி தாசில்தாரவர்கள், ஸப்இன்ஸ்பெக்டரவர்கள், கோவில்பட்டி மில் மானேஜர் ஆர். பி. வெங்கடாச்சாரியாரவர்கள், ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டரவர்கள், டாக்டர் யல். எம். பி. ரெங்காச்சாரியாரவர்கள், வில்லேஜ் மாஜிஸ்ட்ரேட் வி. ராமசாமி நாயக்கரவர்கள், கர்ணம் எஸ். பாலசுப்பிரமணிய பிள்ளை அவர்கள், ராலி வல்காட் பாம்பே கம்பெனி புரோக்கரவர்கள், அ. மா. ம. வேலாயுத நாடாரவர்கள், அ. மா. ம. ஆறுமுகச்சாமிநாடாரவர்கள், அ. மா. ம. சின்னமணிநாடாரவர்கள், கிங் ஜியார்ஜ் ஸ்கூல் புரோப்ரைட்டர் க. அ. ரா. மகாலிங்க நாடாரவர்கள், மேற்படி ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஆர். பஞ்சாபிகேசய்யரவர்கள், வக்கீல் சின்னத்தம்பி பிள்ளை பி. ஏ. பி. யல். அவர்கள் இன்னும் அநேக பிரமுகர்களாக சுமார் ஆயிரம் ஜனங்கள் வரை குழுமியிருந்தார்கள்.

"நாடார் சரஸ்வதி வித்தியா பெண் பாடசாலை" புரோப்ரைட்டர் ஸ்ரீமான் அ. மா. ம. ராமலிங்க நாடாரவர்களால் வரவேற்புக் கூறப்பெற்று, ஸ்ரீமான் டிவிஷனல் ஆபீசரவர்களால் மேற்படி கலாசாலை திறக்கப் பெற்றது.

கூட்டத்தின் முடிவில் மாணவிகளால் ராஜ வாழ்த்துப் பாடப் பெற்ற பின் புகைப்பட மெடுக்கப் பெற்று விழா மங்களகரமாய் நிறைவேறியது என்று ஸ்ரீமான் அ. மா. ம. ராமலிங்க நாடாரவர்கள் எழுதுகிறார்கள்.

## ஏறல் தை அமாவாசை.

ஏறல் ஸ்ரீ அருணாசல சுவாமி தைமாத அமாவாசைத் திருவிழா வைபவத்திற்கு நாலாபக்கங்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். 10 நாள் உற்சவங்களும் வெகு சிறப்பாக நடந்தேறின. 9-ம் திருநாள் மண்டபப்படி விருதுநகர் மகா-ள-ள-ஸ்ரீ கொ. சி. சங்கரலிங்கநாடார் அவர்களால் சிறப்பாக நடத்திவைக்கப் பெற்றது போற்றத் தக்கது. ஷை அமாவாசை வைபவத்தன்று ஒரு பிரமகுலப் பெண்ணின் பேரில் சுவாமி அருளின் மகத்துவத்தினால் அனுமார் ஆவேசமுண்டாகி அருள் வாக்குச் சொல்லி பக்தர்களை சாபல்யமாக்கியது கவனிக்கற்பாலது. ஆதிதிராவிட ஜனங்கள் பேரிலேயும் இதேவிதமாக ஆவேசமுண்டாகி சாதி வேற்றுமையில்லாமல் நடந்துவருகிறது. ஷை தை அமாவாசையன்று ஸ்ரீ அருணாசலசுவாமி இரவு ஒரு மணிக்கு எழுந்தருளியாகி ஏறல் மாநகரம் சுற்றிவந்து சுமார் 4-மணிக்கு வாண வேடிக்கை கம்பம் முதலானவை நடந்தேறின.

கொ. சி. பச்சைய நாடார்,
விருதுநகர்.

சாதி பேதம் இல வய்யன்
சன்னிதா னந்தனில்
நீதி யேதும் பிசகில
நிரு மலம் குன்றில
சோதி நாதன் அன்னவொரு
துணை யருணை வாழேறல்
ஆதி நீதம் உறைஸ்தலத்தை
யணுகி யான் கண்டதம்மா.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## "நாடார் பரிபாலன சங்கம்", விருதுநகர்.

### முதலாண்டு நிறைவு விழா.

#### அக்கிராசனப் பிரசங்கம்.

8—I—28—ல் நிறைவேறிய ஷை சங்கத்தின் முதலாண்டு நிறைவு விழாவில் நமது மகாஜன சங்கத் தலைவர் ஸ்ரீமான் வெ. கனகசபை நாடாரவர்கள் அக்கிராசனம் வகித்து நிகழ்த்திய பிரசங்கம் வருமாறு:—

நாடார் மகாஜன சங்கத்திற்கு நான் அக்கிராசனராக வந்ததும் இந்தப் பக்கங்களைப் பார்க்க வேண்டுமென்று அவாக் கொண்டிருந்தும் முடியாது போய் விட்டது. ஆனால் இப்பொழுது உங்கள் உதவியால் இங்கு வந்து இப்பக்கங்களைப் பார்க்க வேண்டிய சந்தர்ப்பமேற்பட்டதற்காக உங்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். நான் உங்கள் சங்கத்தின் முதல் வருட விழாவிற்குத் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டதற்கு முக்கிய காரணமொன்றுண்டு. அதாவது, நமது நாடார் மகாஜன சங்கத்திற்கு கிளை ஸ்தாபனங்கள் எல்லாப் பக்கங்களிலும் ஏற்படுத்த வேண்டுமென்று அவாக் கொண்டிருந்தேன். உங்கள் சங்கமும் இதற்கு இசைந்த நோக்கத்துடன் இருப்பதால் தான் நான் இப்பதவியை இஷ்டத்துடன் ஒப்புக் கொண்டேன். நம் நாட்டில் சங்கங்கள் தோன்றுவதும் மறைவதும் சகஜமாயிருக்கிறது. ஏனெனில், ஒரு சங்கத்தைத் துவக்கும்பொழுது இருக்கும் உற்சாகம் எப்பொழுதும் இருப்பதில்லை. அதனால் தான் சங்கங்கள் நிலைத்திராது க்ஷீணித்து விடுகின்றன. வாலிபர்களாகிய நீங்கள் இச் சங்கத்தை ஆரம்பம் முதற் கொண்டு பெரும் முயற்சியுடன் எடுத்து நாளடைவில் குன்றி விடாதபடி காத்து வர வேண்டும். அதற்கான தியாகத்தையும் முயற்சியையும் நீங்கள் செய்ய முன் வர வேண்டும். நமக்குள் மன வேற்றுமையும், வேறுபாடுகளும் இருப்பினும் நாம் அதைப் பொருட்படுத்தாது சங்கத்தின் லக்ஷியங்களை நிறைவேற்றுவதிலே கண்ணுங் கருத்துமாயிருக்க வேண்டும். நமது சங்கங்கள் நன்மை பயக்கச் செய்ய வேண்டுமானால் பொறுமையே பூஷணமாகக் கொள்ள வேண்டும். நமது தாய்ப் பாஷையின் அபிவிருத்தியையும் உங்கள் சங்கத்தின் ஒரு நோக்கமாக வைத்திருப்பது பொன்னே போல் போற்றத்தக்கதே. தமிழ் மன்னர் காலங்களில் எவ்வளவோ போற்றப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் தற்பொழுது எவ்வளவோ க்ஷீண திசையடைந்திருக்கும் காலத்தில் நீங்கள் அதை சங்கத்தின் ஒரு நோக்கமாக வைத்துப் பரவச் செய்வதைப் பற்றிச் சந்தோஷப்படுகிறேன். இன்னும் நீங்கள் நாடார் மகாஜன சங்கத்தின் நோக்கங்களாகிய சங்கத்தின் அங்கத்தினர்களை அதிகப்படுத்துதல், சங்கத்தின் பொருளாதார நிலையை விருத்தி செய்தல் முதலிய காரியங்களில் ஈடுபட்டு உழைக்குமாறு கோருகிறேன்.

---

## கள்ளிகுளம் "பாலிய நாடார் சங்கம்" கொழும்பு.

கள்ளிகுளம் "பாலிய நாடார் சங்க" 5-வது வருட 10-வது மாதாந்தக் கூட்டம் சென்ற 8—1—28 இரவு 9-30 மணிக்கு உணுப் பெட்டி 5-ம் நிர். கட்டடத்தில் ஸ்ரீமான் வி. இ. மரியமிக்கேல் நாடாரவர்கள் தலைமையின் கீழ் நடந்தேறியது. அவ்வமயம் மிகத் திரளான ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள். கூட்ட மாரம்பமானதும் ஸ்ரீமான் ச. மி. இ. அந்தோனி நாடாரவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பட்டது. தலைவரவர்கள் தம்முடைய முகவுரையில் தற்கால நாகரீகம் என்பதை மிகத் தெளிவாக எடுத்துரைத்தனர். பின் ஸ்ரீமான்களான மா. ஞா. ஞானசமுத்து நாடாரவர்கள் ஒற்றுமையென்னும் விஷயத்தையும், அ. ச. மதுரேந்திர நாடாரவர்கள் உலகில் மனிதர்களில் உயர்வு தாழ்வு இடையா

## தாலுகாபோர்டு எலெக்ஷனும் திருநெல்வேலிஜில்லா நாடார்களும்.

1924-ஹூ திருநெல்வேலி ஜில்லா நாடார் சங்கம் ஸ்தாபனம் செய்து தாலுகா போர்டுகளைக் கைப்பற்றி சமூகசேவை செய்யவேணும் என்று பிரஸிடெண்டு, காரியதரிசி, பொக்கிஷதார், நிர்வாகக் கமிட்டி என நியமித்து, சட்டமியற்றி, ஜில்லா கான்பரன்ஸ் நடத்தி நம் சமூகத்துக்கு அரசியல் ஞானம் புகட்டவேணும் என்று பெரிய திட்டம் போட்ட பெரியார்களே! எவ்விடம் சென்றீர்கள்? உங்கள் திட்டம் எங்கே? கமிட்டி எங்கே? சட்டம் எங்கே? அந்தோ! கும்பகர்ணன் நித்திரையிலிருக்கின்றீர்களா? அந்நித்திரைகொள்ள இது காலமில்லை. விழித்து எழுந்து அடுத்த தாலுகா போர்டு எலெக்ஷனுக்காகிலும் தீவிரப்பிரசாரம் செய்யுங்கள். கிராமம் தோறும் சென்று கர்ணன்கள் இடமும் கிராம முன்சீப் இடமும் வாக்காளர்கள் பதிவு விடுத்திருப்பின் பதிவு செய்யச் சொல்லவும், மீறி பதிவு செய்ய குதர்க்கம் பேசும் வாயாடிகளை உயர் உத்தியோகஸ்தர்களுக்குத் தெரியவைக்கவும் வேண்டியது உங்களைப் பொறுத்த கடன். ஜில்லாவில் பெரும் தொகையான ஜன சமூகம் நாடார்கள் தான் என்று வீரம் பேசி காலம் போக்க இது காலமல்ல. சுயமரியாதை, சுய நிர்ணயம் என்ற ஒலி உங்கள் காதில் விழவில்லையா? ஒருவரும் அறியாமல் வெற்றிபெற்று விடலாம் என்று மனப் பால் குடிக்க வேண்டாம். உடன் பிறந்த சகோதரர் ஏழைதானே; நாம் பிரபாக இருக்கிறோம் என்று மமதையும் வேண்டாம். பொது முன்னேற்றமும் உங்கள் முன்னேற்றம்தான். பொதுஜன வாக்கே தெய்வவாக்கு. 'செல்வர்க்கழகு செழுங்கிளைதாங்குதல்' என்ற முது மொழியைக் கடைப்பிடித்து பொதுஜனத் தொண்டு செய்ய சுயநன்மை கருதாமல் வெளிவாருங்கள். அப்போது தான் எப்போதும் செல்வாக்குடைத்தாராவீர்கள். தலைவர் என்ற பட்டமும் கிடைக்கும். தாலுகா போர்டிலும் நமது பங்கு கிடைக்கும். நமக்கு எத்தனையோ குறைகளிருக்கின்றன. அவையெல்லாம் என்னவிதமாய் நிவிர்த்திக்கப் போகிறீர்கள்? உங்கள் சமூகத்துக்குச் செய்த நன்மை என்ன? உங்கள் பிற்கால சந்ததியாகிய வாலிப நாடார்களுக்கு என்ன விதமான வழி காட்டினீர்கள்? "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பதை யறியுங்கள். வாலிப நாடார்களே! விழித்து எழுந்து தற்கால ராஜீய உலகில் நமது பங்கு கிடைக்க வழி தேடா முதிர்யார்களும், தலைவர்களும் இளைப்பாற விட்டு விட்டு பொதுத் தொண்டு செய்யச் சலியாதவரும், சுய நலம் கருதாதவரும், ராஜீய அறிவும் தீவிர கொள்கையுமுடையோராகவுந் தெரிந்து தாலுகா போர்டுக்கு நியமித்து (ஓட்) வாக்குரிமை கொடுத்து உங்கள் திட்டமும் வெற்றி பெற முயற்சி செய்வது தான் வாலிப உலகில் உள்ள தேசிய ராஜீய விழிப்பு ஆகும். யாருக்கு வந்த விருந்தோ வென்று நின்று விடாமல் கூடிய சீக்கிரம் தாலுகா போர்டு எலெக்ஷன் பிரசாரம் செய்வது உங்கள் கடன். வீணில் சுய நலப் புலிகளின் மிரட்டலுக்கு அஞ்சி விடாதீர்கள். சுயமரியாதையைக் காப்பதாகிய உங்கள் கடமையை இழக்க வேண்டாம்.

த. சு. மு. பெருமாள் நாடார்,

ஜாசின், மலாக்கா.

---

தென்னும் விஷயத்தையும், ச. மி. இ. அந்தோனி நாடாரவர்கள் கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்னு மொழி பற்றியும் விரிவாய் எடுத்தோதினார்கள். பின் காரியதரிசியால் வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டதும், முடிவுரையாகத் தலைவரவர்கள்புதுவருட வாழ்த்துதல் கூற இராஜ வாழ்த்துடன் கூட்டம் இனிது கலைந்தது என கௌரவபொக்கிஷதார் ஸ்ரீமான் வி. மி. யேசுவடிய நாடார் அவர்கள் எழுதுகிறார்கள்.

---

## சூட்சும சரீரிகளுடன் பேச்சு.

### தேசபந்து விடுத்த செய்தி.

சூட்சும சரீரிகளுடன் ஸ்ரீமான் ரிஷி பம்பாயில் சம்பாஷித்த காலத்தில் "பர்க்கன் ஹெட் கூடிய சீக்கிரம் இறங்கி வருவார்" என்று தேசபந்து தாஸ் சொல்லியதாக "இந்தியன் நேஷனல் ஹெரால்டு" பத்திரிகை அறிவிக்கிறது. ஸ்ரீமான் ஏ. பி. சோத்தியா, ஜே. இ. ஸக்ளத்வாலா, திவான்பகதூர் தாம்பே முதலியவர்கள் அந்த சந்தர்ப்பத்தில் பிரசன்னமாக விருந்தார்கள். வந்திருந்தவர்கள் வெகு சிரத்தையுடன் நடவடிக்கைகளைக் கவனித்து வந்தனர். சூட்சும சரீரங்களை நேரில் பார்த்த ஸ்ரீமான் கே. ஜி. ஜோஷி தமக்குத் தெரியவந்த விவரங்களை எழுதிக் கொண்டார்.

சுபத்திரா பாய் ரிஷியின் சூட்சும சரீரம் முதலில் வந்தது. ஒவ்வொரு கேள்விக்கும் சரியான பதிலை அது கொடுத்ததால் வந்திருந்தவர்களுக்கு எவ்விதச் சந்தேகமும் மேற்படவில்லை. ஸ்ரீமான் ரிஷியின் கேள்விக்கு அது பதிலளிக்கையில், தேசபந்து தாஸும், லோகமான்ய திலகரும் அந்த அறையிலிருப்பதாகச் சொல்லிற்று. ஸ்ரீமான் ஜோஷியும் அந்த சூட்சும சரீரங்களைப் பார்த்ததுடன், லோகமான்யர் நாட்டினருக்கு ஒரு செய்தியை விடுக்க விரும்பியதையும் தெரிந்து கொண்டார்.

"பொதுக் கூட்டத்தில் பேசுகையில் நிற்பது போல் கம்பீரமாக அவர் நிற்கிறார்" என்று ஸ்ரீமான் ஜோஷி சொன்னார்.

தேசபந்து தாஸ் நாட்டினருக்கு ஏதேனும் செய்தி விடுக்க விரும்புகிறாரா வென்று ஸ்ரீமான் ரிஷி தமது மாஜி மனைவியின் சூட்சும சரீரத்தை வினவினார். அவ்விதமே அது வினவியது. வங்காளத் தலைவருடைய யோசனை பல விஷயங்களில் கேட்கப்பட்டது. பதில் சுதாவாகவே எழுதப்பட்டது. சில பதில்கள் மெதுவாகவும், சில பதில்கள் வேகமாகவும் எழுதப்பட்டன. இந்திய ராஜீய விஷயங்களை இன்னும் தேசபந்து கவனித்து வருகிறாரா வென்று கேட்டதற்கு "நிச்சயமாகக் கவனித்து வருகிறேன்" என்று பதில் வேகமாக எழுதப்பட்டது. தற்கால நிலைமையைப் பற்றியும், ஸைமன் கமிஷன் விஷயத்தைப் பற்றியும் அவருடைய அபிப்பிராயம் கேட்கப்பட்டது.

"இதை வெளியிட விரும்புகிறீர்களா?" என்று சூட்சும சரீரம் வினவியது.

"அது உங்களுடைய இஷ்டம். இருந்தாலும் உங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளுவது மகா ஜனங்களுக்கு உபயோகமாகவிருக்கும்" என்று ஸ்ரீமான் ரிஷி தெரிவித்தார்.

"இதைப் பற்றி இப்பொழுது பல விஷயங்கள் சொல்லப்படுவதால், இப்பொழுது சொல்வதை ஒருவரும் லக்ஷியம் செய்ய மாட்டார்கள்" என்ற பதில் கிடைத்தது.

இருந்தாலும் அவருடைய புத்திமதியை ஜனங்கள் தெரிந்து கொள்ள விரும்புவதாக ஸ்ரீமான் ரிஷி சொன்னார்.

அதன் பேரில் "பர்க்கென் ஹெட் கூடிய சீக்கிரம் இறங்கி வருவார்" என்ற பதில் கிடைத்தது.

"எப்பொழுது?" என்று ஸ்ரீமான் ரிஷி கேட்டார்.

"கமிஷன் இந்தியாவுக்கு வந்த பிறகு" என்று பதில் கிடைத்தது.

"அவ்விதமாயின் நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று ஸ்ரீமான் ரிஷி கேட்டார்.

"பொது ஜன அபிப்பிராயத்தை உருப்படுத்துங்கள்" என்று பதில் கிடைத்தது.

## பட்டிவீரன்பட்டி.

### மகமைச் சீர்திருத்தம்.

சென்ற மார்கழி மீ 19-உ பகல் 10 மணிக்கு நாடார்கள் உறவின் முறைப் பேட்டையில் ஓர் பொதுக் கூட்டம் கூடியது. கூட்டத்தினில் தலைவர்களும், மற்று முள்ளவர்களுமாக சுமார் 200 பேர்கள் வரை கூடியிருந்தார்கள். ஆரம்பத்தில் சரவை வாசிக்கப்பட்டது. சிலர் மலைக்குப் போயிருந்தமையால் ஆஜராகவில்லை. அவர்கள் அடுத்த கூட்டத்திற்கு தவறாது ஆஜராக வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

கக்ஷிப் பிரதி கக்ஷி காரணமாய் மகமையைத் தங்கள் கணக்கில் வரவு செய்து வைத்திருந்தவர்களின் ஜாபிதா கூட்டத்தில் வாசிக்கப்பட்டது. ஷை நபர்களில் பலர் உடனே பணம் செலுத்த முடியாத நிலைமையில் இருந்தமையால் வாய்தாக் கேட்டனர். உறவின்முறையோர்கள் கூட்டத்து ஜனங்களின் வாக்கின்படியாய்ப் பணம் செலுத்துவதற்கு வாய்தா கொடுத்தனர்.

#### தீர்மானங்கள்.

1. 50 ரூபாய்க்குள் மகமை கொடாமலிருக்கும் நபர்களின் லிஸ்டு பிரகாரம் நபர்கள் கூட்டத்தார்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கமிஷனர்களிடம் 1 வாரத்திற்குள் செலுத்தி விட வேண்டும்.

2. 100 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை கொடாமலிருக்கும் புள்ளிகள் தமக்கேற்பட்ட வாய்தாப்படி மாதம் மாதம் பணத்தை மகமைக் கடையில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

3. எல்லா நாடார்களும் அனுதினமும் மகமையை மகமைக் கடையில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு மகமையைச் செலுத்தாத நபர்களிடம் முன் வழக்கம்போல் இரட்டிப்பாய் வசூல் செய்யப்படும்.

மேற்கண்ட தீர்மானத்தின்படி எல்லாரும் மகமையை அன்றாடம் மகமைக் கடையில் செலுத்தி வருகிறார்கள். ரூபாய் 50 க்குள்ளான பாக்கிகள் 1 வாரத் தவணையில் வசூல் செய்யப்பட்டு விட்டன. மற்ற விபரம் மறு கூட்டத்தில் முடிவாகும்.

உண்மை உரைப்போன்.

---

## தூத்துக்குடி, நாடார் பாங்க் லிமிட்டெட் கிளை ஸ்தாபனம்.

நமது பாங்கின் கிளை ஸ்தாபனம் ஒன்று நாளது தை மீ 23-உ (5-2-28) விருதுநகரில் அன்று காலை 9 மணிக்குத் திறந்து வைக்கப் பெறும். வைபவத்திற்கு அன்பர்களை வரவேற்கிறோம். தவறாது விஜயஞ் செய்து சிறப்பிக்க வேண்டுகிறோம் என ஏஜெண்ட் எழுதுகிறார்.

---

"இதற்குப் பிறகு இந்தியாவில் பூர்ண ஒற்றுமை இருக்குமா?" என்று ஸ்ரீமான் ரிஷி கேட்டார்.

"இருக்கும். இருந்தாலும் சில விலக்குகளும் இருக்கும். சில வருஷங்களில் விசேஷ மாறுதல்கள் ஏற்பட்டுப் போகின்றன" என்று பதில் கிடைத்தது.

மற்றொரு கேள்விக்கு "இதர தேசங்களின் சுதந்திரங்களைத் தெரிந்து கொள்ளும் வழியில் இங்கிலாந்து இருக்கிறது. நாங்கள் இங்கிருந்து கொண்டு உதவி செய்து வருகிறோம்" என்று பதில் கிடைத்தது.

"சிலர் எதிர்பார்க்கிறபடி 1928-ம் வருஷத்தில் யுத்தம் நடைபெறுமா?" என்று ஸ்ரீமான் ரிஷி கேட்டார்.

"கடவுள் பல வழிகளில் தமது நோக்கத்தைப் பூர்த்தி செய்து வைத்துக் கொள்ளுகிறார். உங்களுக்குக் கடவுள் அனுக்கிரகிப்பாராக" என்று பதில் கிடைத்தது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## முத்துப் பதக்கம்.

வருத்த மெனும் புண்ணை நாட் கழிதல் என்னும் ஔஷதமே குணமாக்கும்.

* *

மன மாயைச் சுழலானது எக் கட்டுப்பாட்டையும் குலைத்து விடுகிறது. கட்டுப்பாடு குலைந்த அச் சுழல் நின்றவுடன் தெளிவுண்டாகி கட்டுப்பாடு சிதைந்த கவலை கட்டிய வீடு இடிந்து விழுந்த கவலை போன்றெழுகிறது. மன மாயைச் சுழல் வைராக்கியக் கோட்டையை மட்டும் ஒன்றும் செய்ய முடியாது.

* *

இன்று நடக்கு மென ஆவலுடன் எதிர் பார்த்திருந்த ஒரு காரியம் நாளை யென்றாகும் போது அக் காரியத்தை யெதிர் பார்த்திருப்பவர்களுக்கு இன்றைய ஒரு நாள் கழிவது பல நாட்கள் கழிவது போல் தோற்றும்.

* *

இமயவரை உயரம் வரை படித்துக் குவித்திருந்தாலும், சமய உரை இல்லாவிடில் படிப்பனைத்தும் பாழ் போனதே.

* *

இருளோடியைந்த மழையில் அடிபட்டு அங்கு மிங்கும் பறந்து தத்தளிக்கும் சிட்டுக் குருவியின் பாடு எப்பாடோ, அப்பாடே பிழைப்பு வழியற்றும் தரித்திர திசை யுற்று முள்ளோர் பாடு.

* *

ஒருவர் இன்னொருவருக்கு ஒரு யோசனை சொல்லும் போது, யோசனை சொல்லப் படு மவர் சொல்லுபவரிடம் தன் கௌரதை விடாது தானும் அப்படித் தான் யோசித்ததாகச் சொல்லிக் கொள்வதுண்டு.

* *

அற்பர்களுக்கு பெரியவர்கள் சகவாசம் கொடுப்பது பின்னால் தமக்கு அவமானத்தை விளைவித்துக் கொள்வதே யாகும்.

* *

அலங்கார உடையினாலும், ஆபரணங்களினாலும் ஒருவரை பணக்காரர் என்று மதித்து விடுதல் கூடாது. நெருங்கிப் பார்க்கின் அவ் வாடையாபரணங்கள் வாடைகைக்கு வாங்கினதாகவும் வெளியாகும்.

* *

இன்று புளித்துப்போன ஒருவர் நேசம் பின்னொரு காலத்தில் எட்டாத கொம்புத் தேனுக் கீடாய் விடுகிறது.

* *

ஒவ்வொரு காரியமும் அதை யியற்றுபவர்களின் தன்மையைப் பொறுத்தே மதிக்கப்படுகிறது. நல்லா ரென்றிருந்தார் பொல்லாக் காரிய மியற்றப் புகினும் அது நல்லதே யென்றும், பொல்லா ரென்றிருந்தார் நல்ல காரிய மியற்றப் புகினும் அது பொல்லாதே யென்றும் மதிக்கப்பட்டு விடுகிறது.

## நீத்தான்பட்டி.

திருநெல்வேலி ஜில்லா, கோவில்பட்டி தாலுகா, ப்சுவந்தனைப் போஸ்டு நீத்தான்பட்டி கிராமத்தில் கிறிஸ்தவ நாடார்களும், இந்து நாடார்களும் சுமார் 50 தலைக்கட்டுகளுடையவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் சில காலத்துக்கு முன் ஒற்றுமை இல்லாமல் இருந்தார்கள். தற்போது வாலிபர்கள் சங்கம் ஒன்று நிறுவி, ஒற்றுமையிலவி யிருக்கிறார்கள். இவ் வொற்றுமை ஆக்கத்தால் அர்ச். ஞானப்பிரகாசியார் கோவில் ஒன்று யாதொரு விக்கினமு மின்றி கட்டடம் நடை பெற்று வருகின்றது. நாளது பரியந்தம் கட்டடச் செலவு ரூபாய் 3000 ஆகின்றது. செலவிற்கு ரோமன் காதலிக் சுவாமிமார் ஒத்தாசையின் பேரிலும் மற்றும் கனவான்களது ஒத்தாசையின் பேரிலும் நடை பெற்று வருகிறது. இன்னும் கட்டடம் முடிவுக்கு வர ரூபாய் 2000 செல்லும். மேற்படி கட்டடத்தில் ரோமன் காதலிக் ஸ்கூல் நடை பெற்று வருகின்றது. ஸ்கூலில் சுமார் 50 பையன்கள் வரையிலும் படித்து வருகின்றார்கள். இக் கட்டடம் பூர்த்தியாகி, பள்ளிக்கூடம் நன் னிலையிலிருந்து வர நாடார் கனவான்களனைவரும் உதவிபுரிய வேண்டுகிறோமென ஸ்ரீமான் செ. தொந்தி நாடார் எழுதுகிறார்.

## பெற்றோரைப் பேணல்.

வாலிப மக்காள்!

பெற்றோர்கள் நம்மை வளர்க்கப் பெரும்பாடு கொண்டவராவர். அப்பாடு குறித்து எம்மட்டும் எழுதலாம். அப்பாடெல்லாம் அன்பினடியாய்க் கிளம்பினவாம். இவ்வன்புருக்கொண்ட பெற்றோர்கள் தயங்குங் காலத்து பிள்ளைகள் அன்னாரைப் பேணக் கடமைப் பட்டுள்ளார்கள். கடமைப்பட்டுள்ளார்கள் எனப் பன்முறை பகரவேண்டும். உத்தம புத்திரர்கள் இயற்கை வடிவிலேயே பெற்றோர் பணி ஏற்றவர்களாயிருப்பார்கள். தம் வாழ்வு நிடத்திற்குப் பெற்றோர் தானே காரணம் என எண்ணிக் கைம்மாறாகப் பேணல் புரியும் புத்திரர்கள் மத்திபராவர். ஒன்று முன்னாது பெற்றோரைத் திரஸ்கரிப்பவர் கயவராவர். இக்கடையாயினர் தம் செயலுக்குத் தேவதண்டனை தப்பார். அந்தோ! இம்மக்கள் செயல் தானென்ன! சுவையுண்டிகள்-சொகுசாடைகள்—மன்மதலீலை இன்பம். பெற்றோர்கள் பக்கம் கண்சாய்ந்தால் ஒட்டியுலர்ந்த வயிறு—கிழிந்த வஸ்திரம்—பசி நோய்த்துன்பம். இப்பரிதாபப் பெற்றோர்களைக் கண்டால் இம் மக்களுக்குச் சீற்றம். இம்மக்களை நினைந்து நினைந்து பெற்றோர்கள் வயிறு கொதிக்கிறார்கள். பிள்ளைப் பேற்றால் அடைந்த பயனிதுவோ! என தணல் மூச்சுவிடுகிறார்கள், இம் மூச்சுத்தான் இத்தகைய மக்களை எரிக்கும் தீயாகும்.

ஒரு வாலிபன் கண்ணிழந்த தன் தாய் தந்தை இருவரையும் காவடி கட்டித் தூக்கி கொண்டு காசிக்குத் தீர்த்தமாடச் செல்லுகையில் தாய் தந்தையர் தாகவிடாய் அதிகரித்து தண்ணீர் வேண்டுமென்று கேட்க, அவர்களை ஓர் மரத்தடியில் இறக்கி வைத்து விட்டு கொஞ்சதூரத்திலிருந்த தடாகத்தில் தண்ணீர் கொண்டு வருவதற்குச் சென்றான். அத்தடாகத்தினில் ஒளிந்து கொண்டிருந்த தசரத மஹாராஜன் யானை வந்திருக்கின்றது என்று எண்ணி அம்பினால் எய்ய, அவ்வம்பு வாலிபனின் மாரில் பாய, அவன் உயிர் துறக்கும் சமயமாயிருக்கையில் தசரதன் ஓடி வந்து பார்க்கையில் வாலிபன் கூறுகிறான்:—வேந்தே! அருகாமையிலுள்ள ஆலமரத்தடியில் கண் தெரியாத என் தாய் தந்தையர் இருக்கின்றனர். அவர்கள் தண்ணீர்த் தாகத்தால் வருந்துகிறார்கள். விரைவாகச் சென்று நீரைக் கொண்டுபோய்க் கொடுத்து அவர்களுக்கு என் விஷயத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்'' என்றனன்.

அன்பர்களே! இவ்வாலிபன் தன் பெற்றோர்களிடத்தில் வைத்துள்ள அன்பை என்னென் றுரைப்பது! தன் உயிர் போகும் சமயத்திலும் தாய் தந்தை யரைக் காப்பாற்ற நினைத்தனன் அன்றோ? இவனே உத்தம புத்திரன்!

ஈன்று வளர்த்த தாய் தந்தைக் கெவரே
[கைம்மாறி யற்றிடுவா
ரான்ற மதலை நூறு வயதளவு மடிமைத்
[திறம் பூண்டு
மூன்று புவனத்துள்ள பொருண் முற்று
[மளித்து முறை முறையே
யேன்று வழிபா டியற்றிடினு மொரு
நாள் வளர்த்தற் கிணையாதே.

என்றும், "மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை யென்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்'' என்றும் ஆன்றோர்கள் கூறி மறைந்தார்கள். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் நம்மை யிவ்வுலகத்திற்குக் கொண்டு வந்து வளர்த்து வாலிபமாக்கிவைத்த அருமைத் தாய் தந்தையர்களைப் பேணிப் பெருமை படுத்தி அவர்க ளாசீர்வாதம் பெற்று வாழ்வு நலனெய்துவோமாக. இது தேவ திருப்திக்குகந்ததாகும்.

சிவ. கு. சிவசுப்பிரமணியன்.

## நன்மை கடைப்பிடி.

(அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசார சபையிலிருந்து)

இறைவன், நன்மை வழி கண்டு அதில் நடக்கவே நம் மொவ்வொருவருக்கும் நுண்ணறிவை யருளி யிருக்கிறார். நன்மை நெறி—இராஜ பாட்டை—தூய வழி யிருக்க தீய பாதை ஏன் செல்ல வேண்டும்? "பெருவழி யிருக்க கொடிவழி போகாதே'' யென்பதொரு நீதி. நல் வழி யேகி நன்மைகள் இனு மடைவதைத் தவிர்த்து துன்மையை பின் பற்றல் தகுமா? எதனை நோக்குச் செல்கிறோமோ அதனையே அடைவோம். பலாப் பழ மிருக்க எட்டியை இச்சித்தல் முறையோ? அன்பு மதத்திலுதித்த நாம் அன்பு வழியேகி அன்பையே எனடைதல் கூடாது? நோயொடு பல தீமைகளையும் நல்கும் இறைச்சியை உபயோகித்தல் விரும்பத்தக்க நெறியாமா?

"அநேகம்பேர் மாமிசம் உண்ணுவதால் மனிதனுக்கு பலம் அதிகரிக்கிறதென்று சொல்லுகிறார்கள். ஆனால் அது தவறு. உண்மையில் பருப்பு, நெய், பால் முதலியவைகளைச் சாப்பிடுகிறவனுக்கு மாமிசம் சாப்பிடுகிறவன் ஈடாக மாட்டான்'' என்பது ஸ்ரீ பண்டிதர் மதன்மோஹன மாளவியாவின் வாக்கு.

பணங் கொடுத்தும் தீமையை விலைக்கு வாங்குதல் மேன்மையாகுமா? பரிசுத்த மெங்கு உதயமோ அங்கு உண்மை உதயம். உண்மை உதயமாகு மிடத்தி லன்பு உதிக்கும். அன்பு ஜனிக்கு மிடத்தில் இரக்கம், தயை, காருண்யம் பிறக்கிறது. காருண்யம் உண்டாகு மிடத்தில் நன்மை மயமான வின்பம் உற்பத்தியாகும்.

"மாமிச போஜனம் இயற்கைக்கு விரோதமாயும், வியாதியை உண்டு பண்ணுவதாயு மிருக்கிறது. மாமிசம் உட் கொள்ளாதிருந்தால் சரீரம் சுத்தப்பட்டு, மனோ சக்தியும் உறுதிப்படுகிறது. அழகை யுத்தேசித்தும் மாமிசத்தை விட்டுவிட வேண்டும்'' என்னும் ஸ்ரீமான் வாஸ்வாணி அவர்கள் வாக்கு கவனிக்கத்தக்கது.

அன்புள்ள விடத்தை யின்பம் தேடி வந்து சேரும். அன்பின் தெய்வீக சக்தியை அளவிட வியலா. ஆயுதத்தைக் காட்டினும் அன்பு அதிக வீர சக்தி யுடையது. அன்பின்றேல் சந்தோஷ மில்லை; சுக மில்லை; இன்ப வாழ் வில்லை; அன்பைக் காட்டிலும் நீராவிக்கு அபார சக்தி யில்லை. வேகத்திலன்பு மின்சாரத்திற்கு பின்னடையாது. அன்பு வித்திலிருந்து நன்மை விருக்ஷ முண்டாகி இன்பக் கனி பழுக்கும். ஒற்றுமைக்கு அன்பே அடிப்படை. நம்பிக்கைக்கும், முன்னேற்றத்திற்கும், புண்ணிய ஜீவகாருண்யத்திற்கும் அன்பே ஜீவ நாடி. பிராணிகளிடத்தில் காட்டும் இரக்கத்திற்கு அன்பே மாதா. அன்பு நெறியே நன்மை பயக்கும் வழி.

"சாக பட்சணத்திலிருக்கும் சத்துவமும், சாரமும் மாமிச பட்சணத்தி லில்லாததால் சாக பட்சணமே சிறந்தது'' மென கலியுக பீமன் ராமமூர்த்தி கூறியிருக்கின்றார். மாமிசத்தை மறந்தால் சரீரத்தோடு மனதிற்கும் நன்மை. இறச்சியை நீக்கியவர்க்கு கறி யுண்பதினாலுற்பவிக்கும் பிணி மாண்டு மகிழ்ச்சி, புண்ணியம், சுகம் முதலிய வெகுமதிகள் அரும்பும்.

பண்டைய மகான்களும், பெரியோர்களும் மக்கட்கு ஜீவகாருண்ய நல் வழியே காட்டிப் போயிருக்கின்றனர். நம் பிள்ளைகள் போன்ற பிராணிகளிடத்தில் ஜீவகாருண்ய மென்னும் சிறந்த தருமத்தைக் காட்ட வேண்டாமா? அடைக்கல மென உங்களிடத்தில் சரண் புகுந்த ஜீவராசிகளிடத்தில் இரக்கம் காட்டுங்கள்.

ஜெர்மன், ஜப்பான் முதலிய தேசங்களில் பெரிய பயில்வான்கள் பந்தய குஸ்தி போடுவதற்கு ஒரு மாதத்திற்கு முன் மாமிசத்தையும், குடியையும் நிறுத்தி விடுகிறார்கள். ஏனெனில் அவைகள் அவர்களை பல வீனமாக்கி விடும். ஒவ்வொருவரும் மாமிச முண்ணல் கூடாதென்பதுதா னென் [illegible]

பகர்ந்திருப்பது கவனிக்கற்பாற்று. நீதற்ற—ஏழை—வாயற்ற அனாதைப் பிராணிகளிடம் தயை புரியுங்கள்.

ஒரு கிராம் நிறையுள்ள வேக வைத்த மாமிசத் துண்டில் 3000 ஏரோப் புழுக்களும், 2000 அன்ரோப் புழுக்களும் காணப்படுகின்றன. இவைகளில் அன்ரோப் புழுக்கள் விஷத் தன்மை வாய்ந்தன என்று கெல்லோக் என்பவர் கூறியிருக்கிறார்.

மாமிசங்களைப் புசிப்பதினால் அவைகளால் உண்டாகும் ரோகத்திற்கு தப்பிப்பதற்கில்லை யென்றும், ஜீரணத்தினால் சில புழுக்கள் இறந்தாலும் பல தப்பித்துத் தீமையை விளைவித்துக் கொண்டுதானிருக்கு மென்றும் ஆங்கில வைத்தியர்கள் கூறியிருக்கிறார்கள்.

அன்பிடம் நன்மை மிளிர்கிறது. இயற்கை வழி சென்று இன்பம் நுகரல் சிறப்பு. கிருமி யுருவ நோய் மலி மாமிசத்தை கனவிலுங் கருதாது புண்ணியந் தேடுங்கள். வாழ்வோ நீர்க்குமிழி. நன்றை இன்றே—இன்னே செய்தல் இன்றியமை[illegible]

## கல்விக் கருள் புரியுங்கள்.

நம் நாடு முன்னேறி நிற்க வேண்டுமானால்—நாம் சுயமரியாதையோடு அடிமை வாழ்வினின்றும் வெளிப்பட வேண்டுமானால் பல வகுப்பினருடைய முன்னேற்றத்தினாலேயே ஆக வேண்டும். ஆகவே நம் மினமும் முன்னேற வேண்டியது இன்றியமையாததாகும். தற் காலம் மது விலக்கு என்ற ஒரு நற் கொள்கைக்கு பாதகமாக நிற்பவர்கள் நாம் ஒருவரே யென்று பல பாமரர்கள் பழி கூறுகின்றனர். அப்பழி நீங்க வேண்டுமாயின் நம்மினத்தினராலேயே ஆக வேண்டி யிருக்கிறது. நாம் முழு முன்னேற்றத்தையு மடைந்திருந்தால் இப் பழி கூறவும் இடமில்லை. ஆகவே இந்தப் பழியையும் நம்முடைய முன்னேற்றத்தின் பலக் குறைவாலேயே நாம் அடைந்தோம் என்பது எனது துணிபு. நாம் முழு முன்னேற்றத்தையு மடைய வேண்டுமானால், கல்வி யொன்றே சிறந்த கருவி யாகும்.

நிற்க, நாம் கல்வியிற் சிறந்த வகுப்பாரில் ஒருவரெனச் சேர்த் தெண்ணப்படினும், நம்மில் அதிலும் தென்னாட்டு நாடார்களிற் பலர் எழுதப் படிக்கத் தெரியாது இருந்து வருகின்றனர். தஞ்சை, திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கித் தாலுக்கா இவைகளிலும் 100—க்கு 2 பேர் கூடப் படித்திருக்க மாட்டார்கள் என்பது திண்ணம். ஆகையால் நாம் கல்வியில் உயர்ந்தவர்களென்று சொல்லிக் கொள்ளினும் முற்றிலுங் கல்வியில் முன்னேற வில்லை என்றே கூறலாம். இதற்கு முக்கிய காரணம் பலர் ஏழைகளாக விருப்பது தான். இவ் வறுமை நோய் தீர்க்க நம் குல தனவான்கள் வைத்தியர்களா யிருக்க வேண்டும்.

"செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்'' என்ற பழமொழிக் கிணங்க நம் செல்வந்தர்கள் தம் தம் ஆற்றலுக்கியைந்தவாறு தனிப்பட்ட ஹோதாவிலாது அன்றி கூட்டுறவாகவோ ஏழை மக்களுக்கு கல்வி யூட்ட கருணை கொள்ள வேண்டும். எத் தானத்திலும் உத்தம தானம் வித்தியாதானமே யாகும். இத் தர்ம வழியில் சிந்தனை செலுத்தி நம் குல நலம் விழையும் பொருட்டு செல்வந்தர்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம்.

கல்வியே கதி மோட்சம் என்னும் உண்மையை யுணர்ந்து நமது நாடார் மகாஜன சங்கம் இது விடயத்தில் பெரிதும் கவலை கொண்டு பிரதம பாடசாலை முதல் கல்லூரி வரையும் ஏழைமாணவமாணவிகளுக்குபணஉதவி செய்து வருகிறது. இம்மாணவ மாணவிகள் இது சமயம் சொற்பத் தொகையினராயே யிருக்கின்றார்கள். கூடிய சீக்கிரத்தில் சங்கத்தில் பணம் மிகுந்து பல ஏழை மாணவர்களுக்குக் கல்வி கிடைத்து வர ஆண்டவன் அருள்வாராக.

நாடார் மாணவர்கள்,
திருத்துறைப்பூண்டி.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection